REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 டிசம்பர் 4 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 288 | Saturday 04, December, 2021 | 12 பக்கங்கள் | 30/-

## காட்டுயானை தாக்கி விவசாயி மரணம்

*காரைதீவு குறூப் நிருபர்*

காட்டுயானை தாக்கியதில் காட்டுமடு இளம் விவசாயி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் பிரதேசத்திலுள்ள கோமாரியையடுத்து காட்டுமடு வயற்பிரதேசத்தில் நேற்று (3) அதிகாலை இடம் பெற்றுள்ளது.

கொல்லப்பட்டவர் ஆலையடிவேம்பு கண்ணகிபுரத்தைச் சேர்ந்த 06

## நாட்டில் எரிவாயு கசிவை கண்டறியும் இரசாயன பதார்த்தம் பற்றாக்குறை

### சமையல் எரிவாயு விநியோகத்தை நிறுத்த அமைச்சர் லசந்த உத்தரவு



நாட்டில் எரிவாயு கசிவை கண்டறியும் இரசாயன பதார்த்தம், உரிய அளவில் இல்லாதமை காரணமாகவே, எரிவாயு விநியோகம் மற்றும் விற்பனையை இடைநிறுத்துமாறு அறிவித்ததாக இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண தெரிவித்துள்ளார்.

எரிவாயு கசிவை கண்டறியும் மணத்தை உருவாக்கும் எதில் மெகப்டன் (Ethyl Mercaptan), சிலிண்டர்களில் 14 அலகுகளாக இருக்கவேண்டும். ஆனால் அது தற்போது 05 அலகுகளாக உள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 06

## இலங்கை பிரஜைக்கு பாகிஸ்தானில் கொடூரம்

### எரித்து கொல்லப்பட்டதாக தகவல்கள்

இலங்கை பிரஜை ஒருவரை சித்திரவதை செய்து, கொலைசெய்து அவரது உடலை எரித்துள்ள சம்பவம் பாகிஸ்தான், சியால்கொட்டில் பதிவாகியுள்ளதுடன், இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று (03) இடம்பெற்றுள்ளது. நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர பொலிஸார் குவிக்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. சியால்கொட்டிலுள்ள வசிராபாத் வீதியில், தனியார் தொழிற்சாலையொன்றின் ஏற்றுமதி 06

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு

## பாடசாலைகளுக்கு 10 நாட்கள் விடுமுறை

### கல்வியமைச்சு நேற்று அறிக்கை



அரச மற்றும் அரச அனுமதியுடன் இயங்கும் தனியார் பாடசாலைகளுக்கு கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, 10 நாட்கள் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதன்படி, இம்மாதம் 24ஆம் திகதி வழங்கப்படும் விடுமுறை, ஜனவரி மாதம் 06

தென்னாபிரிக்காவிலிருந்து நாடு திரும்பியவரூடாக

# இலங்கைக்குள் ஊடுருவியது 'ஒமிக்ரோன்' திரிபு வைரஸ்

### முதலாவது நபர் அடையாளம் காணப்பட்டார்

தென்னாபிரிக்காவிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர் ஒருவருக்கு ஒமிக்ரோன் கொவிட் வைரஸ் திரிபு தொற்று உறுதியாகியுள்ளதாக பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

தொற்றாளர் தென்னாபிரிக்காவின் நைஜீரியாவிலிருந்து வந்த 25 வயது யுவதியொருவரென்றும் சிலாபம் பகுதியில் வதிபவரென்றும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இந் நபர் நாட்டை வந்தடைந்த போது விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனையின் பெறுபேறுகளை ஆராய்ந்தபோது அவருக்கு ஒமிக்ரோன் திரிபு தொற்று உறுதியானதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் 06



## ஒமிக்ரோன் திரிபு தொடர்பில் மூன்று வாரங்களில் தெளிவு

### தென்னாபிரிக்க நிலவரம் ஆராயப்படுகிறது நீலிகா



புதிய கொரோனா வைரஸான ஒமிக்ரோன் திரிபு தொடர்பில் அடுத்த மூன்று வாரங்களில் தெளிவான கருத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் 06

## இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு முயற்சி

### இந்தியாவுடன் 4 அம்ச திட்டத்திற்கு ஏற்பாடு



இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கு உதவும் விதமாக உணவு மற்றும் எரிசக்தி, பாதுகாப்பு தொடர்பான முன்முயற்சிகள் தொடர்பில் விவாதிக்க இந்தியாவும் இலங்கையும் நான்கு அம்ச அணுகுமுறைக்கு ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள 06



## தூதுவர் பதவியை பொறுப்பேற்றார் மஹிந்த சமரசிங்க

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கடமைகளைப் 06

நீதிமன்றத்தை அவமதித்த இரண்டாவது வழக்கு

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான விசாரணை ஜனவரி 24 இல்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பிலான வழக்கை எதிர்வரும் ஜனவரி 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த இரண்டாவது வழக்கில், ரஞ்சன் ராமநாயக்க 06

## நாடு முழுவதும் நேற்று ஆறு மணி நேரமாக மின்துண்டிப்பு

### சி.ஐ.டி விசாரணைக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் கோரிக்கை

பாராளுமன்ற மின்தூக்கிக்குள் சிக்கிய 02 எம்.பிக்கள் பாதுகாப்பாக மீட்பு

மின்சார தொழிற்சங்க நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தம்

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*



நாடு முழுவதும் ஏற்பட்ட மின்துண்டிப்பு தொடர்பில் சி.ஐ.டி விசாரணை நடத்த வேண்டுமென ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில் 06

## மறு அறிவித்தல்வரை லிட்ரோ எரிவாயு விநியோகம் நிறுத்தம்

### தரம் பற்றிய தெளிவான உத்தரவாதம் கிடைத்த பின்பே விற்பனை



லிட்ரோ எரிவாயு சிலிண்டர் விநியோகம் மற்றும் விற்பனை நாடுமுழுவதும் இடைநிறுத்தியுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. நேற்று முன்தினம் (2) காலை முதல் மறு அறிவித்தல் வரை இதனை அமுல்படுத்தியுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. எரிவாயு தரம் பற்றிய தெளிவான உத்தரவாதம் கிடைக்கும் வரை இந்த முடிவு அமலிலிருக்கும் என்று நிறுவனம் கூறுகிறது. 06

## ஒரு இலட்சம் காணி உறுதி பத்திரங்கள் மக்களுக்கு

### விரைவில் வழங்க அரசு நடவடிக்கை

*லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்*



ஒரு இலட்சம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் இந்த வருட இறுதிக்குள் 75 ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்க முடியுமெனவும் காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார். 06

சீனா இடைநிறுத்திய மின் நிலையங்கள்

## வடக்கில் இந்தியாவை கால் பதிக்க கோருகிறார் மனோ



வடக்கிலுள்ள தீவுகளில் முன்னெடுக்கவிருந்த மின் உற்பத்தி திட்டங்களை சீன நிறுவனம் இடைநிறுத்தியுள்ளதாக இலங்கைக்கான சீன தூதரகம் அறிவித்துள்ளது.

அந்த தீவுகளில் சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இந்தியா உடனடியாக முன்வர வேண்டுமென பாராளுமன்ற 06

## லாஃப் எரிவாயு விநியோகம் தொடரும்

### நிறுவனம் நேற்று அறிவிப்பு



லாஃப் எரிவாயு சிலிண்டர் விநியோகம் தொடருமென லாஃப் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும் சமையல் எரிவாயு விநியோகத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு நுகர்வோர் 06

## நாடு முழுவதும் விரைவில் புதிய வேலைத்திட்டங்கள்

### SLFP தலைவர் மைத்திரிபால அறிவிப்பு



நாடு முழுவதும் புதிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். வரவு செலவு திட்டத்தின் பின்னரான விடுமுறையுடன் இந்த திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்றார்.

நேற்று முன்தினம் (02) நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 06

## அடுத்த பாதுகாப்பு அமைச்சர் தான் என பொன்சேகா கனவு

### எல்லை கடந்த கனவு என்கிறார் நிர்மலநாதன் எம்.பி

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*



ஐக்கிய மக்கள் சக்தி அரசில் தானே பாதுகாப்பு அமைச்சரென முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி எல்லை கடந்து கனவு காண்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். 06

ஐ.ம.சயில் நானே பாதுகாப்பு அமைச்சர்;

## மாவீரர் தினத்தை நடத்த அனுமதிக்க முடியாது

### பாராளுமன்றத்தில் சரத் பொன்சேகா தெரிவிப்பு



*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*

அடுத்து வரும் தங்களது ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சராக தன்னை நியமிப்பதாக கட்சித் தலைவர் 06

## வடமேல் மாகாண ஆளுநருக்கு கொரோனா

வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரேவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் தொடர்பான தகவல்களை சுகாதாரப் பிரிவினர் திரட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புலிகளின் தங்கம் தேடிய இடத்தில் அகழ்வுப் பணி

### நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நேற்று ஆரம்பம்



முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்ததாக நம்பப்படும் தங்கத்தை மீட்பதற்காக தனியார் காணி ஒன்றில் அடையாளம் தெரியாதவர்களால் தோண்டப்பட்ட இடத்தில் நீதிமன்ற உத்தரவிற்கமைய நேற்று மீண்டும் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. 06

2015 பிணைமுறி வழக்கு விசாரணை;

## அர்ஜுன் இன்றி நடத்த நீதிமன்றம் நேற்று அனுமதி



2015 பிணைமுறி வழக்கு விசாரணையில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் அஜான் கார்தியா புஞ்சிஹேவா ஆகியோரின்றி பிணைமுறி மோசடி வழக்கை முன்கொண்டு செல்ல கொழும்பு மேல் நீதிமன்ற நிரந்த நீதாயம் 06

சஹ்ரான் ஹாசிமுடன் தொடர்பு;

## கண்டியில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

### அடிப்படைவாத விரிவுரைகளில் கலந்து கொண்டாராம்



கண்டி ஹிங்குல பகுதியில் உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் பிரதான குண்டுதாரியான பயங்கரவாதி சஹ்ரான் ஹாசீமுடன் தொடர்புடைய 25 வயதான இளைஞன் ஒருவர் 06

### விக்கல் வீராச்சாமி



அசாத் சாலி ஐயா விடுதலையாகிட்டார், என்னத்த சொன்னாலும் மனுஷன் சமூகத்துக்காக குரல் கொடுக்கிறதில முன்னுக்குத்தான்.....

அதண்டா உண்மைதான், சும்மா உணர்ச்சிவசப்பட்டு கண்டதையும் கதைக்கிறதால பிரச்சினைகள், இனியாவது கவனமாக இருக்கட்டும்...!!!




# மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய வீடுகளை பெற்றுத் தரவேண்டும்

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை மாவட்டத்தில் மண்சரிவு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிட்டக்கந்த தோட்ட மக்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதில் தோட்ட நிர்வாகம் தொடர்ந்து அசமந்தப் போக்கை கடைபிடித்து வருவதாக இரத்தொட்டை பிரதேசசபை உறுப்பினர் எஸ். எரோஷன் தெரிவித்தார். கடந்த ஒன்பது வருடங்களுக்கு முன்னர் மண்சரிவு அனர்த்தம் காரணமாக பிட்டக்கந்த தோட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு அதே தோட்டத்தில் வீடுகளை நிர்மாணித்து கொடுப்பதில் தோட்ட நிர்வாகம் தொடர்ந்து அசமந்தப் போக்கை கடைபிடித்து வருவதாக இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு பிட்டக்கந்த தோட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவு அபாயத்தில் 25 தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் மக்கள் இக்குடியிருப்புகளிலேயே வசித்து வருகின்றனர் .

மழைக் காலங்களில் இவர்கள் தற்காலிக கூடாரங்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர் குடும்பங்களுக்கு அதே தோட்டத்தில் காணிகளை வழங்கி குடியிருப்புக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அப்போதைய தோட்ட நிர்வாக முகாமையாளர் உறுதியளித்திருந்தார். எனினும் முகாமையாளர் ஓய்வு பெற்று சென்றதும் அப் =பதவிக்கு வந்த புதிய முகாமையாளர் குடியிருப்புக்களை அமைப்பதற்கான காணியை ஒதுக்கித் தர முடியாது என மறுத்து விட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தமக்கு தாம் வசிக்கின்ற தோட்டத்திலேயே இதற்கான காரணியை பெற்றுத்தர வேண்டும் என தெரிவிக்கின்றனர். ஏனெனில் தமது பிள்ளைகளுக்கான பாடசாலை வசதி, மத வழிபாட்டு வசதி, தமக்கான வேலை வாய்ப்பு வசதிகள் தாம் வசிக்கும் தோட்டத்தில் இருப்பதால் தமக்கென குடியிருப்புகளை அமைப்பதற்கான தோட்டத்திலேயே வழங்கவேண்டும் என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்

தோட்ட முகாமையாளர் முன்வைக்கும் இக்காரணங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்றுவரை குடியிருப்புக்கள் நிர்மாணித்து கொடுப்பதில் இழுபறி நிலை ஏற்பட்டு வருகின்றது. இவ்விடயம் குறித்து அபிவிருத்திக் குழுக் கூட்டம் பிரதேச சபை கூட்டங்களில் தொடர்ந்து கருத்து தெரிவித்த போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்த பிரதேச சபை உறுப்பினர் எஸ். எரோஷன் இது சம்பந்தமாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு இதற்கான நிரந்தரத் தீர்வையும் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

அரசினால் மேற்கொள்ளப்படும் தோட்ட மக்களின் நலன் திட்டங்களுக்கு போதிய ஒத்துழைப்பை வழங்க தோட்ட நிர்வாகங்கள் முன்வர வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.











இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் 2020 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது கினலன் தோட்டத்தின் Line No07 பாதையை புனரமைப்பதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றி நேற்று அப்பாதையை திறந்து வைத்தார். விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இப்பாதைக்கான வேலைத்திட்டத்தை செந்தில் தொண்டமான் முன்னெடுத்துள்ளார் .

## பட்டிப்பொலவில் வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

நுவரெலியா பட்டிப்பொல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம்(02) மதியம் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

குடியிருப்பாளர்கள் கேஸ் அடுப்பில் சமையல் செய்து கொண்டிருந்த போது, திடீரென கேஸ் அடுப்பு வெடித்ததால், கேஸ் அடுப்பு பலத்த சேதம் அடைந்தது.

இந்த வெடிப்பு சம்பவத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் பட்டிப்பொல பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலையில் அதிபராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற முன்னாள் அதிபர் முஹம்மத் ரிசாத்தை பாடசாலையின் தற்போதைய அதிபர் எம் ஜே எம் மன்சூர் மற்றும் பிரதி அதிபர்களான எம்.வை.எம்.அரூஸ் மல்லிகா ஆகியோர் கூட்டாக இணைந்து பாராட்டு பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.

(படம்: பலாங்கொடை தினகரன் நிருபர்)

## மஞ்சள் கன்றுகள் வழங்கி வைப்பு



சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் மவுசாகலை விவசாய அபிவிருத்தி சங்கத்தினால் 500 மஞ்சள் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

சௌபாக்கியா வீட்டுத் தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக அம்பகமுவ பிரதேச செயலகத்தின் மவுசாகலை 320I கிராம சேவகர் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள விவசாய அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக தோட்ட பயனாளர்களின் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் நோக்கத்தில் சுமார் 500 மஞ்சள் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டது.

# ஓமிக்ரோன் பிறழ்வைக் கண்டறிய ஆய்வுகூட வசதிகள் உள்ளன

சுகாதாரத் தரப்பு தெரிவிப்பு



ஓமிக்ரோன்ன் பிறழ்வு பரவுதல் தொடர்பாக உரிய புரிதல் இலங்கையில் இருப்பதாகவும், சிலவேளை நாட்டுக்குள் வைரஸ் நுழைந்தால் மரபணு பரிசோதனையின் மூலம் அதனை அடையாளம் காண்பதற்கு ஆய்வுகூட வசதிகள் உள்ளதாகவும் சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டியது.

“ஒமிக்ரோன்ன் வைரஸை தடுப்பதற்கு நாடு தயார்” என்ற தலைப்பில் நேற்று முன்தினம் (02) பிற்பகல் ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பின் போதே இக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் நுண்நுயிர் எதிர்ப்புகள் விஞ்ஞானம் மற்றும் மூலக்கூறு விஞ்ஞானக் கல்விப் பிரிவின் தலைவர் பேராசிரியர் நீலிக்கா மலவிகே, சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் எச்.எஸ்.முனசிங்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உயிர் அணு உயிரியல் விஞ்ஞான கல்விப் பிரிவின் தலைவர் கலாநிதி சந்திம ஜீவந்தர, சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ஹேமந்த ஹேரத் ஆகியோர் கலந்துகொண்ட ஊடக சந்திப்பு ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்கவினால் நடத்தப்பட்டது.

இதுவரை இருந்த கொரோனா வைரஸ் பிறழ்வு 04ஐ விடவும் ஒமிக்ரோன் பிறழ்வு மிகவும் வேகமாக பரவக்கூடியதுடன், கொவிட் தொற்றுக்குள்ளாகி குணமடைந்தவர்களுக்கும் இது மீண்டும் தொற்றக்கூடுமென்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் நுண்நுயிர் எதிர்ப்பிகள் விஞ்ஞானம் மற்றும் மூலக்கூறு விஞ்ஞான கல்விப் பிரிவின் தலைவர் பேராசிரியர் நீலிக்கா மலவிகே சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் இரண்டு மூன்று வாரங்களுக்குள் ஒமிக்ரோன்ன் பிறழ்வு பற்றி தெளிவான கருத்துக்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று சுட்டிக்காட்டிய நீலிக்கா மலவிகே, நோய் எதிர்ப்புச் சக்தி உயர்மட்டத்தில் இருக்குமாயின் மாறுபட்ட பிறழ்வுகளுக்கு அஞ்ச வேண்டியதில்லை என்றும் தெரிவித்தார். உலகின் 24 நாடுகளில் இதுவரை ஒமிக்ரோன்ன் பிறழ்வு அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக உலக சுகாதார பிரிவு விசேட அவதானத்துடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாரிய அர்ப்பணிப்பு மற்றும் தலையீடுகள் காரணமாக கொவிட் கட்டுப்படுத்தலில் உலகின் உயர் நிலைக்கு நாடு அடைந்திருப்பதாகவும், புதிய பிறழ்வை கட்டுப்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியப்படுவதோடு, உரிய சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றி அதற்கு ஒத்துழைப்பு வழங்குவது அனைவரினதும் கடமையாகும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் எச்.எஸ்.முனசிங்க குறிப்பிட்டார்.

இதுவரை தடுப்பூசிகளைப் பெறாதவர்கள் உடனடியாக தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டியதோடு, பூஸ்டர் தடுப்பூசியின் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதனால் ஓமிக்ரோன் வந்தாலும் அனாவசிய அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை என்றும் குறிப்பிட்ட கலாநிதி சந்திம ஜீவந்தர, பொதுமக்கள் உரிய சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம் என்றும் தெளிவுபடுத்தினார்.

நோய்க்கு பயப்படுவதற்குப் பதிலாக சுகாதாரப் பரிந்துரைகளைப் பின்பற்றி, நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்வதன் முக்கியத்துவத்தையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

தற்போது அரசாங்கம் செயற்படுத்துகின்ற கொவிட் தடுப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமானதாக உள்ளதோடு, பண்டிகை காலத்தில் பயணங்களை சுருக்கிக் கொள்ளுமாறு

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 டிசம்பர் 4 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

04 முதல் 06 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.48 |
| ளுஹர் | 12.02 |
| அஸர் | 03.24 |
| மஃரிப் | 05.54 |
| இஷா | 07.08 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் கார்த்திகை 18

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: திதித்துவயம்

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | செலவு |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | சுகம் |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | கோபம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் வலுவான பொறிமுறை முன்னெடுப்பு



## அமைச்சர் சமல் ராஜபக்ஷ

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் வலுவான பொறிமுறையை நாட்டில் நடைமுறைப்படுத்துமாறு அனைத்து பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு, நீர்ப்பாசன மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்று (03) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

முழு பாதுகாப்பு கட்டமைப்பிலும் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி மற்றும் பின்னடைவு காரணமாக கடந்த காலங்களில் இந்த நாட்டு மக்கள் எதிர்நோக்கிய சவால்களை மீண்டும் எதிர்கொள்ள இடமளிக்கப்போவதில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று (03) பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொது பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட பல செலவினத் தலைப்புகள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் சமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொற்றுநோய்கள், பேரழிவுகள், பயங்கரவாத நடவடிக்கைகள், போதைப்பொருள், வன்முறை, தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள், மனித கடத்தல், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சுற்றுச்சூழல் மற்றும் அழிவுகள் போன்ற அனைத்து வகையான அச்சுறுத்தல்களிலிருந்தும் மக்களைப் பாதுகாப்பதும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் முதல் கடமையாக அரசாங்கம் கருதுகிறது. எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள விரிவான தேசிய பாதுகாப்பு மூலோபாயம் செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

தமிழ் மக்களுக்கான உரிமையை:

# வழங்கினால் மாத்திரமே அரசாங்கம் எதிர்பார்க்கும் நாட்டை கட்டியெழுப்ப முடியும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

தமிழ் மக்களுக்கான உரிமையை பெற்றுக் கொடுத்தால் மாத்திரமே நாட்டில் சமாதானத்தை கட்டியெழுப்ப முடியும் அத்துடன் அரசாங்கம் எதிர்பார்க்கும் இலங்கையை கட்டியெழுப்ப முடியும் என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எம்.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் எதிரிகள் அல்ல. அவர்களது உரிமைகளையே அவர்கள் கேட்கின்றனர். அவர்கள் அதற்கான அருகதை உடையவர்கள். அதை அரசாங்கம் புரிந்து செயல்படாவிட்டால் ஒருபோதும் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்: யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் உண்மைகளை மறைக்கும் வரை, அதிலிருந்து தப்பலாம் என்ற எண்ணத்துடன் செயற்படும் வரை நாட்டில் சமாதானத்தை கட்டியெழுப்ப முடியாது.

06

# கல்முனை தமிழர் பிரதேசத்தின் மைதானப் பிரச்சினைக்கு தீர்வு

## இராஜாங்க அமைச்சர் நிமால் லான்சாவுடன் உறுப்பினர் ராஜன் சந்திப்பு

**காரைதீவு குறூப் நிருபர்**

கிராமிய வீதிகள் மற்றும் பாலங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிமால் லான்சாவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் நடத்திய சந்திப்பையடுத்து கல்முனை தமிழர் பிரதேச மைதானப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. மாத்தளை மாநகர மேயர் சந்தனம் பிரகாஸ் சகிதம், கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் கல்முனை தமிழ்ப் பிரிவிலுள்ள மைதானத்தை

06



# அனைத்து துரோகத்தையும் செய்துவிட்டு அரசாங்கத்தின் மீது கை நீட்டுகின்றனர்

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நல்லாட்சி அரசாங்கத்தின் இயலாமையும் பலவீனமுமே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணம். அதை வைத்து இப்போது எதிர்க்கட்சி அரசியல் செய்யப்பார்ப்பதாக அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

செய்ய வேண்டிய அத்தனை துரோகத்தனத்தையும் செய்துவிட்டு இப்போது நாமே அந்த தாக்குதலுக்குக் காரணமானவர்களென எதிர்க்கட்சி அரசாங்கத்தின் மீது கை நீட்டுவது விந்தையாக உள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

அரசாங்கம் எதையும் எந்த சந்தர்ப்பத்திலும் மறைக்கப் போவதில்லையென்பதை குறிப்பிட்ட அமைச்சர் இவர்கள் நேர்மையானவர்களென்றால் 2019 தேர்தலில் வெற்றி பெற்றிருக்க முடியுமே? என்றும் அமைச்சர் சபையில் கேள்வியெழுப்பினார்.

அதேவேளை, அரசாங்கம் எந்த தேர்தலுக்கும் பயப்படப் போவதில்லை. மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டு அதிலும் வரலாற்று வெற்றி பெறுவது உறுதியென்றும் அவர் தெரிவித்தார்.

06

# காணி உறுதிப் பத்திரம் பிரச்சினைக்குத் தெளிவான தீர்வை வழங்குங்கள்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

காணி உறுதிப் பத்திரங்களின்றி கணிசமான காலமாக தங்கியுள்ளவர்களுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் பிரச்சினைக்குத் தெளிவான தீர்வை வழங்குமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நில அளவை உத்தியோகத்தர்களுக்கு எவ்வித இடையூறுமின்றி பணிகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்குமாறும், கணக்கெடுப்புக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# புலிகள் மனித கேடயங்களாக உபயோகித்த 2,80,000 தமிழ் மக்களை அரசாங்கமே பாதுகாத்தது

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீரசேகர சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

எந்த சர்வதேச நாடுகளும் செயற்படாத வகையில் விடுதலைப்புலிகள் மனித கேடயங்களாக வைத்திருந்த இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் தமிழ் மக்களை அரசாங்கமே பாதுகாத்தது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கஷ்டப்படும்போது கொழும்பில் சொகுசாக வாழ்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் மக்கள் தொடர்பில் பேசுவதற்கு எந்த அருகதையும் அற்றவர் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் வாழ்வாதாரத்துக்கு அவசியமான வகையில் 2 இலட்சத்து 90 ஆயிரம் கண்ணிவெடிகளை அரசாங்கம் தமது சொந்த செலவில் அகற்றியுள்ளது. அந்த நடவடிக்கையில் ஈடுபட்ட படையினருக்கு ஒரு யோகட்டை கூட வழங்குவதற்கு முன்வராத கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் மக்கள் தொடர்பில் பேசுவதற்கு எந்த அருகதையும் அற்றவர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் வரவு செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்.

தற்போது அகிம்சாவாதி போன்று சபையில் பேசும் அனுரகுமார திசாநாயக்க எம்.பி பிள்ளைகளை கொன்று பெற்றோர்களை அனாதையாக்கியதை மறந்து விட்டார். நாட்டில் குண்டு வெடிப்பு செய்தவர்களை தேசியப்பட்டியல் எம்.பியாக வருவதற்கு வாய்ப்பு வழங்கியவர்கள் இப்போது உயிர்த்த ஞாயிறு பாதிக்கப்பட்ட மக்கள் பற்றி பேசுகிறார்கள். அது தொடர்பில் பேசுவதற்கு அவர்கள் அருகதை இல்லாதவர்கள்.

ஆளும் கட்சியும் – எதிர்க்கட்சியும்

# பழிவாங்கலுக்கு பதிலாக இணைந்து செயற்படுவது காலத்தின் தேவையாகும்

## சபையில் டிலான் பெரேரா எம்பி.

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

அரசாங்கமும் எதிர்க்கட்சியும் பழிவாங்கும் நோக்கமுடன் எதிரிகளாக செயற்படாமல் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே கொரோனாவினால் வீழ்ச்சியடைந்த நாட்டை மீள கட்டியெழுப்ப முடியும் என பொதுஜன பெரமுன எம்பி டிலான் பெரேரா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை மக்கள் பிரதிநிதிகளும் அரசாங்க அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயல்பட்டால்தான் நாட்டை பொருளாதாரத்தில் கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சு மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்கள் மீதான வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், உலக பொருளாதாரம் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளது. உலக உணவு நிறுவனத்தின் அறிக்கையின்படி கடந்த ஒன்றரை தசாப்தங்களில் கடந்த நான்கு மாதம் போன்று உணவுப் பொருட்களின் விலைகள் எப்போதும் அதிகரித்ததில்லை என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலை உட்பட அனைத்து பொருட்களின் விலைகள் மிக மோசமாக உயர்வடைந்துள்ளது.

அதேவேளை உலகம் முழுவதும் இதுவரை 5 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் கொரோனாவினால் உயிரிழந்துள்ளனர். அடுத்து வரும் இரண்டு வருடங்களில் மேலும் 200 மில்லியன் பேர் கொரோனாவினால் பாதிப்படைவர் என்றும் பெருமளவு மக்கள் மரணமடையலாம் என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. உலக நாடுகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் போன்றே எமது நாட்டிலும் பொருட்களின் விலையேற்றம் அதிகரித்து காணப்படுகின்றது

06

# வடக்கில் போதைபொருள் வர்த்தகத்தை கண்டறிய தனியான புலனாய்வு பிரிவு அமைக்கப்பட வேண்டும்

## பாதுகாப்பு அமைச்சிடம் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம். ஷம்ஸ் பாஹிம்**

வட மாகாணத்திலிருக்கும் போதைபொருள் வர்த்தகர்கள் பாவனையாளர்கள் போன்றோரை கண்டறிய தனியான புலனாய்வுப் பிரிவொன்றை களமிறக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்ட நுழைவாயிலில் இருக்கின்ற சோதனை சாவடி ஊடாக மன்னார் மாவட்டத்துக்குள் வருபவர்கள், வெளியே செல்பவர்கள் மிகப்பெரிய நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். அரச சேவையாளர்கள் முதல் சாதாரண பயணிகள் வரை அந்த சோதனை சாவடியில் இறக்கி ஏற்றப்படுகின்றனர். மன்னார் மாவட்டத்திலிருந்து நீர்கொழும்பு, பேலியகொடைக்கு செல்கின்ற மீன் வியாபாரிகள் குறிப்பிட்ட நேரத்துக்கு மீன்களை கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதே



போன்றே ஏனைய வியாபாரிகளினதும் அனைத்து பொருட்களும் இறக்கி ஏற்றப்படுகின்றன. போதைவஸ்து கடத்தல் நடக்கிறது. அதனால் தான் இந்த சோதனை என சோதனை சாவடியிலுள்ள அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையில் மன்னார் தீவைச் சுற்றி கடல் இருக்கையில் எப்படி கடற்படைக்கு தெரியாமல் மன்னார் தீவுக்குள் போதைவஸ்துப் பொருட்களை கொண்டு வர முடியும்? இந்த சோதனை சாவடிகளில் மக்கள் தான் அவலப்படுகின்றார்களே தவிர போதைவஸ்து வியாபாரிகள் தங்கள் போதைவஸ்து வியாபாரங்களை செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். கொழும்பில் பல இடங்களில் போதைவஸ்து பிடிபட்டாலும் இங்கு எந்தவொரு இடத்திலும் சோதனைச் சாவடி அமைத்து மக்களை கஷ்டப்படுத்தவில்லை.

போதைவஸ்து கடத்தல்களை தடுக்க தனியான புலனாய்வு பிரிவொன்றை உருவாக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவுக்கு அது முடியும். எனவே அவ்வாறான தனியான புலனாய்வுப் பிரிவை உருவாக்கி வடக்கு மாகாணத்தில் போதைவஸ்து வியாபாரிகள். போதைவஸ்து பாவனையாளர்களை கட்டுப்படுத்த முடியும்.

குற்றவாளிகளுக்கான வாழும் உரிமையை

# பொலிஸ் மாஅதிபரோ பொலிஸாரோ தீர்மானிக்கக் கூடாது

## அனுரகுமார திசாநாயக்க

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

குற்றவாளிகளின் வாழும் உரிமையை பொலிஸ் மாஅதிபரோ பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சரோ தீர்மானிக்கக் கூடாதென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குற்றவாளிகளை தண்டிப்பதற்கு அது சம்பந்தமான நிறுவனங்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் தொடர்பிலும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களின் வரவு செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அனுரகுமார திசாநாயக்க எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பொலிஸார் குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு செல்வதும் அங்கு குழப்பங்கள் ஏற்படுவதும் அதில் குற்றவாளிகள் கொல்லப்படுவதும் நாட்டில் தொடர்ந்தும் ஒரு நாடகமாக அரங்கேறி வருகிறது.

அவ்வாறான குற்றவாளிகளின் வாழும் உரிமையை சம்பந்தப்பட்ட பொலிஸ்

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 138.70 | 144.90 |
| கனடியன் டொலர் | 153.39 | 159.52 |
| யூரோ | 223.77 | 232.33 |
| ஜப்பான் யென் | 1.7434 | 1.8128 |
| சிங்கப்பூர் டொலர் | 144.38 | 149.24 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 262.37 | 271.01 |
| சுவிஸ் பிராங்க் | 214.20 | 222.17 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |


| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 531.63 | கட்டார் ரியால் | 54.66 |
| குவைத் டினார் | 663.06 | சவூதி ரியால் | 53.43 |
| ஓமான் ரியால் | 520.63 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.57 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 18ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரபீஉனில் ஆகிர் பிறை 28

### குறள் தரும் சிந்தனை



ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து

தனக்குத் தீமை செய்தவரைப் பொறுக்காமல் தண்டித்தவரைப் பெரியோர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்; பொறுத்துக் கொண்டவரையோ பொன்னாகக் கருதி மதிப்பர்.

## தாயகக் கனவுகளுடன் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகள்

இந்தியாவின் தமிழ்நாடு அகதி முகாம்களில் மிக நீண்ட காலமாக அகதிகளாகத் தங்கி வாழ்கின்ற இலங்கை அகதிகளின் நலன்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் மீண்டும் கரிசனை செலுத்தத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் தங்கி வாழ்கின்ற இலங்கை அகதிகள் எவராவது மீண்டும் தாயகம் திரும்பி வந்து வாழ்வதற்கு விரும்பினால் அவர்களுக்கு கௌரவமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகரகத்தின் பிரதி உயர்ஸ்தானிகர் சமீபத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து உரையாடியிருந்தார். இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளை தாயகத்துக்கு அழைத்து வருதல் மற்றும் இந்திய மீனவர்களின் ஊடுருவல் விவகாரம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக இச்சந்திப்பின் போது இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அச்சந்திப்பின் போது தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழர் விவகாரம் பற்றி பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தியாவில் தங்கியிருக்கும் அகதிகளில் ஒரு தொகுதியினர் மீண்டும் இலங்கைக்குத் திரும்பி வருவதற்கு விரும்பினால் அவர்களை நாட்டுக்கு அழைத்து வந்து இங்கு வாழ்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குவது குறித்து அச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து இங்கு அழைத்து வரப்படவுள்ள இலங்கை அகதிகளுக்கு பயண ஏற்பாடுகளை இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும், அவர்களது பொருட்களை ஏற்றி வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இச்சந்திப்பின் போது பிரதி உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். அத்துடன் அவர்களுக்கு ஆரம்பத்தில் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவேற்றுள்ளார். தமிழகத்திலிருந்து மீண்டும் இலங்கைக்கு வந்து வாழ்வதற்கு விரும்புகின்ற இலங்கை அகதிகள் தங்களது இயல்பு வாழ்க்கையைத் தொடர்வதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் முழுமையான ஒத்துழைப்பு தனக்குக் கிடைக்குமென்று தான் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவிலுள்ள அகதிகள் நலன் தொடர்பான விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பத்தில் இருந்தே பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இது விடயத்தில் கடந்த கால அரசாங்கங்களும் அவ்வப்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளன. இந்திய மீனவர்களில் எல்லை தாண்டிய ஊடுருவல் தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாக விசேட கவனமெடுத்து நடவடிக்கை மேற்கொண்டு வருவதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும்.

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் அந்நாட்டில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக வாழ்ந்து வருகின்றனர். தற்காலிக இருப்பிடங்களும், நிவாரணங்களும் அவர்களுக்கு கிடைத்து வந்ததே தவிர, அவர்கள் அந்நாட்டில் கௌரவமாக அடிப்படை வசதிகளுடன் வாழ்வதற்கான ஏற்பாடுகள் தமிழகத்தின் ஆட்சியாளர்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. தமிழகத்தில் தி.மு.க ஆட்சி மலர்ந்து முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவியேற்ற பின்னரே இலங்கை அகதிகளின் வாழ்வில் விடிவு ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு முதலமைச்சர் ஸ்டாலின் தற்போது துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அது மாத்திரமன்றி இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அந்நாட்டின் மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தமிழக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்நடவடிக்கையானது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியதாகும்.

இலங்கைத் தமிழ் அகதிகளில் பெரும்பாலானோர் மீண்டும் தாயகத்துக்குத் திரும்பி இங்கு வாழ்வதற்கான மனோநிலையைக் கொண்டிருக்கவில்லை. அவர்களில் ஏராளமானோர் இலங்கையில் 1983 இல் இடம்பெற்ற வன்செயலைத் தொடர்ந்து தமிழகத்துக்கு படகுகளில் இடம்பெயர்ந்து சென்றவர்களாவர். சுமார் 38 வருட காலமாக அங்கு வாழ்ந்து வருகின்ற இலங்கைத் தமிழ் அகதிகள் சமூகம் அந்நாட்டு வாழ்க்கைக்கே பழக்கப்பட்டுப் போயுள்ளது.

அதேசமயம் இலங்கைத் தமிழ் அகதிகளில் தற்போது இரண்டாவது பரம்பரை அங்கே உருவாகி விட்டது. தமிழகத்திலேயே பிறந்து அந்நாட்டின் சூழலுக்கே வாழ்ந்து பழக்கப்பட்டுப் போனவர்கள் இலங்கை மண்ணுக்கு வந்து இங்கு வாழ்வதென்பது நடைமுறைச் சாத்தியமும் இல்லை. ஆனாலும் இலங்கையிலேயே பிறந்து வளர்ந்து தமிழகத்துக்கு அகதிகளாக இடம்பெயர்ந்து சென்றவர்களில் அநேகர் இன்னமும் தாயகம் பற்றிய ஏக்கங்களுடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

அவ்வாறானோர் மீண்டும் தாயகம் திரும்பி இங்கு வாழ்வதற்கு விரும்புவார்களாயின் அவர்களுக்கு இங்கு கௌரவமாக வாழ்வதற்கான வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதே நியாயமாகும். ஏனெனில் அவர்கள் வேற்றுநாட்டவர்கள் அல்லர். அவர்கள் நமது மக்கள். இலங்கை அகதிகள் மீண்டும் தங்களது தாயக மண்ணில் வந்து வாழ்வதை ஊக்குவிப்பதுடன், அவர்களுக்கான வாழ்வாதார வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதே பொருத்தமாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஒப்படைக்கப்பட்ட பணியை சரிவர நிறைவேற்றிய சிறிசேன குரே

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அனுதாபம்



கொழும்பு மாநகர சபையில் தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்து பின்னர் அமைச்சரவை அமைச்சராக பதவி வகித்த சிரிசேன குரேயின் மறைவுக்கு கவலையை தெரிவித்துக்கொள்கின்றோம். சிரிசேன குரே அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தன மற்றும் பிரதமர் ஆர்.பிரேமதாசவின் வேண்டுகோளுக்கிணங்க 1979ம் ஆண்டு கொழும்பு மாநகரசபையில் போட்டியிட்டு மேயராக தெரிவானார். தொடர்ந்து 1989 வரை 10 வருட காலம் அவர் மேயராக பதவி வகித்தார். கொழும்பு மாநகர சபையில் அவர் பதவி வகித்த காலம் சரித்திரத்திலேயே பொன்னான காலமாகும். கொழும்பு நகரை மேம்படுத்துவதோடு கொழும்பில் வாழும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பல திட்டங்களை அவர் மேற்கொண்டார்.

சிரிசேன குரே மறைந்த ஜனாதிபதி ஆர் பிரேமதாசவின் நெருங்கிய நம்பிக்கைக்குரிய நண்பராகவும் திகழ்ந்தார். ஜனாதிபதி தேர்தலின் போது அவரின் பிரசாரத்துக்கான பெரும் பங்களிப்பை சிறிசேன குரே வழங்கினார். ஜனாதிபதியாக ஆர் பிரேமதாச தெரிவு செய்யப்படுவதற்கு சிறிசேன குரே நண்பராக , திறமையான அமைப்பாளராக மற்றும் ஒரு வழிகாட்டியாக திகழ்ந்தார் என்றே கூற வேண்டும்.

மிகவும் பயங்கரமான வேளையில் வடக்கு கிழக்கில் யுத்த பயங்கரவாதம் என்னும் தீ எரிந்து கொண்டிருந்த வேளையில் நடைபெற்ற 1988 ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை இங்கு குறிப்பிடலாம். அன்றைய சூழலில் தேர்தலை நடத்துவது என்பது நடக்க முடியாத ஒன்றாகவே காணப்பட்டது. அவ்வாறான பின்னணியில் சிறிசேன குரேவுக்கு பெரும் பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தது. சிறிசேன கூறி அந்த சவாலுக்கு முகம் கொடுத்தார். அதன் பலன் 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் எடுத்துக் தெளிவாக எடுத்துகாட்டின. நாடே பீதியில் உறைந்து இருந்த வேளையில் சவாலுக்கு சவால் விடுத்த அவரது அந்த தீரச்செயல் இன்றும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவர் யார் ?என்ன செய்கின்றார்? என நாடு பூராவும் ஒட்டிய சுவரொட்டிகள் மூலம் ஆரம்பித்த தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இறுதியில் வெற்றிக்கனியை பெற்றுத்தந்தது. இன்று வரை அனைவரும் வியந்து பேசும் ஒரு விடயமாக காணப்படுகின்றது.

ஜனாதிபதி பிரேமதாசவின் கம் உதாவ வேலைத்திட்டத்திற்கு மேயராக இருக்கும் வேளையிலேயே தனது ஒத்துழைப்பை வழங்கி இருந்தார். 1989ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவான அவர் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராக பதவியேற்றார். அவருக்கு அந்த அமைச்சுப் பதவி வழங்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது அவர் கம்உதாவ திட்டத்தின் மூலம் பெற்றிருந்த அனுபவமாகும்.

சம்பிரதாய அரசியல் நடவடிக்கைகளுக்கு அப்பால் ஜனாதிபதி பிரேமதாச வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கே கூடிய கவனம் செலுத்தினார். அவரின் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சிறிசேன குரே பெரும் பங்களிப்பை வழங்கினார்.

சிறிசேனகுரே மக்களின் எண்ணங்களை நன்கு புரிந்து கொண்ட அரசியல்வாதியாவார். ஏதேனும் பணி ஒன்றை அவரிடம் ஒப்படைத்தால் அதனை அர்ப்பணிப்புடன் செயல்பட்டு நிறைவேற்றும் திறமை வாய்ந்தவராக அவர் காணப்பட்டார். எல்.ரீ.ரீ.ஈ தாக்குதலால் ரஞ்சன் விஜயரத்ன கொலை செய்யப்பட்ட பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளராக சிரிசேன குரே நியமிக்கப்பட்டார். விசேடமாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்ட உட்கட்சி பூசலால் அதிலிருந்து அதிலிருந்து விலகி புரவெசி பெரமுன கட்சியை ஆர். பிரேமதாச ஆரம்பித்த வேளையில் அவருடன் இணைந்து சிரிசேன குரே நம்பிக்கையுடன் செயல்பட்டார். அவர் மீது வைத்த நம்பிக்கை காரணமாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் பதவி சிறிசேன குரேவுக்கு வழங்கப்பட்டது.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் அகால மரணத்தைத் தொடர்ந்து அவரது உருவச் சிலையை சென் பஸ்தியமில் அமைத்ததோடு அவர் மரணமடைந்த ஆமர் வீதி சந்தியில் அவருக்கு நினைவுத்தூபியையும் அமைத்தார். அத்துடன் கெத்தாராம விளையாட்டு மைதானத்தை ஆர் பிரேமதாச விளையாட்டு மைதானம் என பெயர் மாற்றம் செய்ததும் சிறிசேன குரே ஆவார்.

1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட அவர் அரசியல் வாழ்க்கையில் பாராட்டுக்கள் ,அவமானங்கள், லாப ,நட்டம் என அனைத்தையும் நடுநிலையான மனதுடன் ஏற்றுக் கொண்டவர் ஆவார். குரலை உயர்த்தி பேசாத அவரின் முகத்தில் எப்போதும் புன்னகை தவழ்ந்து கொண்டிருக்கும். அவர் யாருடனும் பகைமை பாராட்டாது அனைவரையும் ஒற்றுமையுடன் வாழ வைக்க முயற்சி செய்த ஒரு உயர்ந்த பண்பு நிறைந்த மனிதராவார்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

தமிழில்: **வீ.ஆர் வயலட்...**
(கல்குடா தினகரன் நிருபர்)

# ஓமிக்ரோன் ஊடுருவியதையடுத்து தீவிர உஷார் நிலையில இந்தியா!




### இந்திய விமான நிலையங்களில் கடும் பரிசோதனைகள்; ஒமிக்ரோன் வேகமாக பரவுமென்பது உறுதி, ஆனால் அதிகளவு உயிராபத்துகளை ஏற்படுத்துமென்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை

உலகமெங்கும் கொரோனா சற்று ஓய்ந்திருந்த நிலையில், தென்னாபிரிக்காவின் கோட்டங்க் மாகாணத்தில் ஜோனஸ்பெர்க் இல் முற்றிலும் மாறுபட்ட வகையில் தனித்துவமான, உருமாறிய கொரோனா வைரஸ் உருவாகியுள்ளது. இதுவரை 29 நாடுகளில் அது பரவி விட்டது.

உலக சுகாதார அமைப்பால் 'ஒமிக்ரோன் வைரஸ்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த வைரஸ் பற்றிய சில சந்தேகங்கள் நிலவுகின்றன. அதற்கான விளக்கங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

இது டெல்டா வகை கொரோனா வைரஸை விட வேகமாக பரவுமா என்ற வினா முக்கியமானது. கொட்டங்க் மாகாணத்தில் டெல்டா வைரஸை விட வேகமாக பரவி முதலாவது இடத்தை எட்டியுள்ளது. டெல்டா வைரஸ் போலவே இதன் தாக்கம் பல மாதங்களுக்கு முன்பே பரவத் தொடங்கி உள்ளது.



ஒமிக்ரோன் மற்றொரு அலையா? இதற்கான சாத்தியக்கூறு அதிகமாக இருப்பினும், இறப்புகள் பற்றி இன்னும் தகவல்கள் வெளியிடப்படவில்லை. இதுவரை பதிவாகியுள்ள தகவலின்படி நோய்த்தொற்றின் பாதிப்பு குறைவாக உள்ளது. அந்த மாகாணத்தில் ஒமிக்ரோன் வைரஸால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில், இறப்பவரின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவே உயர்ந்து உள்ளது.

இதுவரை குழந்தைகளிடம் இருந்து இத்தொற்று கண்டறியப்படவில்லை. தொற்றுக்கான அறிகுறிகள் இவைதான்:

தீவிர சோர்வு, தசை வலி, தொண்டை அரிப்பு, வரட்டு இருமல் என அதிகளவிலும் ஒருசிலருக்கு அதிகளவில் காய்ச்சலும் தென்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் முழுமையாக தடுப்பூசி போட்டவர்களுக்கும் இத்தொற்று பரவுகிறது. எனினும் தடுப்பூசிகள் அனைத்து மாறுபட்ட தீவிர கொரோனா தொற்று நோயிலிருந்தும், இறப்பிலிருந்தும் பாதுகாக்கிறது. கொரோனா அலைகளில் கடைப்பிடித்தது போல, விமான போக்குவரத்து மூலம் வெளிநாட்டவர் வருகையை கண்காணிப்பது, முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி கடைப்பிடித்தல், கிருமிநாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்தல், பொது இடங்களில் கூட்டமாக கூடுவதை தவிர்த்து தனிமனித இடைவெளியை கடைப்பிடிப்பது போன்ற நடவடிக்கைகளை செயல்படுத்துவது நல்லது.

ஒமிக்ரோன் சிகிச்சை முறையில் தற்போது கடைப்பிடிக்கப்படும் மருத்துவ நடவடிக்கைகளே தொடரும் நிலை உள்ளது.

#### பூஸ்டர் தடுப்பூசி தேவைப்படுமா?

தடுப்பூசி போட்ட பிறகும் ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால், அது திருப்புமுனை தொற்று எனப்படும். பூஸ்டர் டோஸ்கள் செலுத்திக் கொள்வதால் அதிக அளவிலான நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். இது நோய்க்கு எதிராகவும், பரவும் தன்மைக்கு எதிராகவும் பாதுகாப்பாக இருக்கும்.

முதல் நிலை, இரண்டாம் நிலை தடுப்பூசி செலுத்தியவர்கள், அடுத்த நிலை பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொள்வது பாதுகாப்பானது என்கிறார்கள் சர்வதேச மருத்துவ நிபுணர்கள்.

இதேவேளை இந்தியாவிலும் நேற்றுமுன் தினம் ஒமிக்ரோன் புகுந்து விட்டது. கர்நாடகாவில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். புதிய ஒமிக்ரோன் பாதிப்பு குறித்து யாரும் அச்சப்பட வேண்டாம். ஆனால் முழு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என தமிழக சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

தமிழகத்திலும் ஒமிக்ரோன் பாதிப்பு வந்துள்ளதாக சிலர் வதந்திகளைப் பரப்பி விடுகின்றனர். இது பீதியை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து சுப்பிரமணியன் அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

ஒமிக்ரோன் பாதிப்பு தமிழகத்தில் வராமல் தடுக்க முழு முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விமான நிலையங்களில் கூடுதல் உஷாராக இருக்குமாறு பணித்துள்ளோம். வெளிநாட்டில் இருந்து வரும் பயணிகள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றனர்.ஒமிக்ரோன் வைரஸ் குறித்து யாரும் அச்சப்பட வேண்டியது இல்லை. ஆனால் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இதனைத்தான் மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர் என்றார் அவர்.

திருச்சியிலும், சென்னையிலும் ஒமிக்ரோன் வந்து விட்டதாக தவறான தகவல் பரப்பி விடப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் இருந்து வந்த ஒருவருக்கு கொவிட் பொசிட்டிவ் வந்துள்ளது. அவர் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு மரபியல் ரீதியிலான சோதனை நடத்த உத்தரவிட்டுள்ளோம். தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்றார் சுப்பிரமணியன்.

தென்னாபிரிக்கா உள்ளிட்ட சில நாடுகளில் பரவி வந்த, 'ஒமிக்ரோன்' எனப்படும் உருமாறிய கொரோனா வைரஸ், இந்தியாவிலும் நுழைந்துள்ளது. கர்நாடகாவில் இரண்டு பேர் இந்த வைரசால் பாதிக்கப்பட்டுள்ளது நேற்றுமுன்தினம் உறுதி செய்யப்பட்டுள்ளது. 'கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும்' என, மாநில அரசுகளை மத்திய சுகாதாரத் துறை எச்சரித்துள்ளது. கொரோனாவின் முதல் மற்றும் இரண்டாவது அலை தாக்கத்திலிருந்து உலக நாடுகள் மீண்டு வரும் நிலையில், உருமாறிய புதிய வகை கொரோனா வைரஸ் தென்னாபிரிக்கா உள்ளிட்ட சில நாடுகளுக்கும் பரவத் தொடங்கியுள்ளது.

#### பீதி வேண்டாம்:

ஒமிக்ரோன் பரவலை தடுக்க இந்தியாவிலும் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒமிக்ரோன் பரவியுள்ள நாடுகளில் இருந்து வரும் பயணியருக்கு, விமான நிலையத்திலேயே கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது என, ராஜ்யசபாவில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில், கர்நாடக மாநிலம் பெங்களூரில் ஒமைக்ரான் வைரசால் இருவர் பாதிக்கப்பட்டுள்ளது நேற்று உறுதி செய்யப்பட்டது. இது குறித்து, மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் இணை செயலர் லாவ் அகர்வால் கூறியதாவது:

கர்நாடக மாநிலம் பெங்களூரில், 66 மற்றும் 46 வயதான ஆண்கள் இருவருக்கு கொரோனா தொற்று இருப்பது பரிசோதனையில் உறுதியானது. இருவருக்கும் சார்ஸ் மரபணு பரிசோதனை ஆய்வகத்தின் மூலம் நடத்தப்பட்ட போது, அவர்களுக்கு ஒமிக்ரோன் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவர்களுக்கு இலேசான அறிகுறி மட்டுமே தென்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ஒமிக்ரோன் வைரசால் இருவர் பாதிக்கப்பட்டு உள்ளதால், யாரும் பீதிஅடைய தேவையில்லை. முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை கடைப்பிடித்தல், தடுப்பூசி போட்டுக் கொள்ளுதல் உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றி அனைவரும் பொறுப்புடன் நடந்து கொண்டால் போதும்; தொற்று பரவலை தடுத்து விடலாம்.

இந்த வைரசின் தன்மை பற்றி இப்போது எதுவும் கூற முடியாது. எனினும் இந்த வைரஸ், இதுவரை கண்டறியப்பட்ட வைரஸ்களில் மிகவும் வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

(09ஆம் பக்கம் பார்க்க)



**அச்சப்படுவதால் பயனில்லை; அவதானமாக நடந்து கொள்ளுமாறு மக்களுக்கு எச்சரிக்கை!**

# யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாயக் குழுக் கூட்டம்



யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் (02) மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனின் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வாரி சௌபாக்கியா வேலைத்திட்ட செயற்பாடுகள், குளங்கள் வாய்க்கால்கள் புனரமைப்பு கோரிக்கைகள், விவசாய செய்கைக்கான உரமானிய வழங்கல் நடவடிக்கைகள், களஞ்சிய வசதிகள், விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்ட நடவடிக்கைகள், உருளைக்கிழங்கு மானியசெயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டது.

இங்கு விவசாய அமைப்பு பிரதிநிதிகளின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டதுடன், குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், இவ்வருடம் விவசாய நடவடிக்கைகள் பல சவால்களுக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது .

அந்தவகையில் அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட மானிய உதவித் திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் எமது நாட்டின் முதுகெலும்பாக உள்ள விவசாய நடவடிக்கைகள் அண்மையில் ஏற்பட்ட தொடர்ச்சியான மழை அனர்த்தம் காரணமாக பாரிய சவாலை எதிர்நோக்கியுள்ள இத்தருணத்திலும் விவசாய செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் விவசாயிகளுக்கு மாவட்ட செயலகம் சார்பாக தமது நன்றிகளை தெரிவித்ததுடன் ,எதிர்காலத்திலும் விவசாய செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுக்க ஆலோசனை வழங்கினார்.

மேலும், பிரதேச மற்றும் கிராம மட்ட விவசாய குழு கூட்டத்தில் வங்கிகளால் வழங்கப்படும் சலுகைகள் தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

தேசிய ரீதியாக உள்ள உரப்பிரச்சினை தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் அதிகளவில் விவசாய செய்கையில் இரசாயனப் பதார்த்தங்களை பயன்படுத்துவதால் உணவில் நஞ்சுத் தன்மை அதிகரித்து நாளடைவில் தொற்று நோய்களுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்கள் அதிகரிப்பதாக தெரிவித்தார் .எனவே உடல் உள சமூக ஆரோக்கியத்தை முன்நிறுத்தி விவசாயிகள் சேதனப் பசளை பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மாவட்ட திட்டமிட்டல் பணிப்பாளர்,மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்,பிரதேச செயலாளர்கள் உதவிப்பிரதேச செயலாளர்கள், கமலநல திணைக்கள உதவி ஆணையாளர், மாகாண விவசாய திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள்,வங்கி துறைசார் தரப்பினர் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள்,மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார் தரப்பினர் கலந்து கொண்டனர்.

## தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

# வவுனியா கூமாங்குளத்தில் காணி தகராறு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் காணி தகராறு காரணமாக ஏற்பட்ட கைகலப்பில் மூன்று பெண்கள் உட்பட 4 பேர் காயமடைந்து வவுனியா வைமத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த 1ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கூமாங்குளம், முருகையா குளத்திற்திற்கு செல்லும் வீதியில் குடும்பம் ஒன்று வசித்து வரும் காணிக்குள் நுழைந்து கொட்டகை ஒன்றை போடுவதற்கு சிலர் முயன்றுள்ளனர். இதனை குறித்த காணியில் வசித்து வந்தோர் தடுத்து நிறுத்த முற்பட்ட போது வாய்தர்க்கம் ஏற்பட்டதுடன், தடுக்க சென்றவர்கள் மீது அங்கு வந்தவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர். குறித்த தாக்குதலில் தாய், பிள்ளைகள் என மூன்று பெண்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த காணி தொடர்பில் கடந்த சில மாதங்களாக ஒருவர் பிணக்கில் ஈடுபட்டதாகவும், அவருக்கு ஆதரவாக வருகை தந்த சிலர் அத்துமீறி கொட்டகை அமைக்க முயன்றதுடன், தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வடபகுதி கடற்பரப்பில் ஒதுங்கும் சடலங்கள்

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

வடபகுதி கடற்பரப்பில் அடுத்தடுத்து ஒதுங்கும் இனந்தெரியாத சடலங்களினால் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை(27) வடமராட்சி கிழக்கு மணற்காட்டு பகுதியிலும் அன்றைய தினம் வல்வெட்டித்துறை பகுதியிலும் இரண்டு சடலங்கள் கரையெதுங்கின.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை(28) நெடுந்தீவு பகுதியில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியது. அதனைத் தொடர்ந்து வெற்றிலைக்கேணி பகுதியில் செவ்வாய்க்கிழமை (30) சடலம் ஒன்று கரை யொதுங்கியது.

இதனை தொடர்ந்து வியாழக்கிழமை(02) பிற்பகல் சுப்பர்மடம் கடற்கரையில் இனம்தெரியாத சடலமொன்று கரையொதுங்கியது.

ஆறு நாட்களுக்குள் வடபகுதி கடற்பரப்பில் இனம் தெரியாத ஐந்து சடலங்கள் கரையொதுங்கி இருப்பது பொது மக்களிடத்தில் பெரும் அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளது.

# புகையிரதத்துடன் கப் ரக வாகனம் மோதி விபத்து

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்துடன் கப் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் நேற்று மதியம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் கப் வாகன சாரதி படுகாயமடைந்துடன், வாகனம் பலத்த சேதமடைந்தது.

சாரதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வட்டுக்கோட்டை வைத்தியசாலையில் திருட்டு

**யாழ்.விசேட நிருபர்**

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை இரவு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியான பணம் களவாடப்பட்டுள்ளது.இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

குறித்த வைத்தியசாலையில் பணிசெய்யும் தாதியர் ஒருவருடைய அறையில் வைக்கப்பட்டிருந்த தாதியருடைய பணம் மற்றும் வைத்தியசாலையின் பணம் என்பன இவ்வாறு களவாடப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் குணதிலக மற்றும் வட்டுக்கோட்டை பொலிஸ் உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சின்ன சிப்பிகுளத்தில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா செட்டிகுளம் சின்ன சிப்பிகுளம் பகுதியில் உள்ள வீடொன்றில் (02) எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

வீட்டில் இருந்த இல்லத்தரசி கேஸ் அடுப்பில் சமையல் செய்வதற்கு தயாராகிவிட்டு அதனை இயக்கிவிட்டு வெளியில் சென்றுள்ளார்.

இதன்போது எரிவாயு அடுப்பு திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளதுடன் பின்னர் வெடித்துள்ளது. தீபற்றி எரியும்போது வீட்டின் உரிமையாளர் உடனடியாக அயலவரை அழைத்திருந்தார். விரைந்து செயற்பட்ட அயலவர்கள் எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்து சிலிண்டரை வெளியில் எறிந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் இரட்டை பெரியகுளம் பகுதியிலும் எரிவாயு அடுப்பு தீப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2023 இல் புதிய இலத்திரனியல் கடவுச்சீட்டு அறிமுகம் செய்யப்படும்



**-அமைச்சர் சமல் ராஜபக்ஷ**

2023 இல் புதிய இலத்திரனியல் கடவுச்சீட்டு அறிமுகம் செய்யப்படும் என அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று (03) பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சு பொது பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட பல செலவினத் தலைப்புகள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் சமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சைபர் துறை பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க சைபர் துறை பலப்படுத்தப்பட்டுள்ளது. கபீர் விமானங்களின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

குற்றச்செயல்களை கட்டுப்படுத்தவும் போதைப்பொருள் கடத்தலை முறியடிக்கவும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடற்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பெருமளவு போதைப் பொருட்கள் கடந்த காலத்தில் பிடிபட்டன.புலனாய்வு பிரிவினால் அடையாளங் காணப்பட்ட திட்டமிட்ட குற்றச்செயல்கள் மேற்கொள்ளும் குழுக்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் பிரிவினைவாத யுத்தத்தை நிறைவு செய்ய பங்களித்த படையினரின் நலனுக்கு பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் மாதம் முதல் எமது நாட்டில் முக்கிய பிரச்சினையாக கோவிட் தொற்று மாறியது. இதில் முப்படை முக்கிய பங்காற்றியது. 5 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு இராணுவம் தடுப்பூசி வழங்கியது.

எல்லை நிர்ணய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கை 6 மாதங்களில் கிடைக்க இருக்கிறது. நிர்வாக மற்றும் சமூக ரீதியில் முக்கியமான கிராம சேவகர் பிரிவுகளை இதன் வாயிலாக நிர்ணயிக்க முடியும். இலத்திரனியல் கிராம சேவகர் சேவையை அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் முன்னெடுக்க இருக்கிறோம். மக்களுக்கு அவசியமாக 23 சான்றிதழ்களை ஒன்லைன் ஊடாக பெறவசதி அளிக்க இருக்கிறோம்.


இந்திய அரசின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் வியாபார நிலையமொன்றை ஆரம்பிக்க இருக்கிறோம். கிராம சேவகர் யாப்பை மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடந்த காலத்தில் நிவாரணம் வழங்கப்பட்டன. அனர்த்தங்கள் நடைபெறும் இடங்களை முன்கூட்டி கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கீழ் இலத்திரனியல் கடவுச்சீட்டொன்றை அறிமுகம் செய்ய இருக்கி றோம்.இதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. 2023 இல் புதிய இலத்திரனியல் கடவுச்சீட்டு அறிமுகம் செய்யப்படும். கடவுச் சீட்டுகளை புதுப்பிப்பதற்காக ஒன்லைன் முறையின் கீழ் விண்ணபிக்கும் திட்டம் இம்மாத இறுதிக்குள் அறிமுக செய்யப்படும். பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கீழ் மோசடிகள் இடம்பெறுவதை தடுக்க விசேட திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

2022 முதல் சகல பிரதேச செயலகங்களிலும் பிறந்தது முதல் குழந்தையின் அனைத்து தகவல்களும் உள்ளடக்கிய தேசிய பிறப்புச்சான்றிதழ் திரட்டி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். ஒன்லைன் ஊடக பிறப்பு இறப்பு சான்றிதழ்களை ஒன்லைன் ஊடாக வீடுகளுக்கு அனுப்பும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## பட்ஜட் விவாதம்



சபை நிருபர்கள்

லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்







**தமிழ் தேசியக்கூட்டமைப்பு எம்.பி. எஸ். ஸ்ரீதரன்**

கடந்த 27 ஆம் திகதி வல்வெட்டித்துறை. பருத்தித்துறை பகுதிகளில் இரு உடல்கள் கரையொதுங்கியுள்ளன. 28 ஆம் திகதி நெடுந்தீவில் ஒரு உடலும் 30 ஆம் திகதி கட்டைக்காட்டுப்பகுதியில் ஒரு உடலும் 2 ஆம் திகதி பருத்தித்துறை சக்கோட்டையில் ஒரு உடலும் வெற்றிலைக் கேணியில் ஒரு உடலுமாக மொத்தம் 6 உடல்கள் கரையொதுங்கியுள்ளன. இதில் ஒன்று மட்டுமே உள்ளாடையுடன் காணப்பட்டுள்ளது. இவர்கள் யார் என்பது இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏன் இவ்வளவு காலம் எடுக்கின்றது?

இங்கு கரையொதுங்கிய உடல்களில் ஒருவரின் கையில் சமய நூல் கட்டப்பட்டுள்ளது. இன்னொருவர் உடலில் 3 நாட்களுக்கு முதல் வெட்டுக்காயங்களுக்காக இடப்பட்ட தையல் அவிழ்க்கப்படாத நிலையில் உள்ளது. இன்டர்போல் முதல் உலகம் வரை பிரபலமாகி பேசப்படுகின்ற இலங்கை பொலிஸாரால் ஏன் இன்னும் இந்த உடல்களுக்குரியவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை? இந்த நாட்டில் சடலங்கள் அதுவும் ஆண்களினுடைய சடலங்கள் கரையொதுங்குகின்றது என்றால் இதற்கு யார் பொறுப்புக்கூறுவது? இதற்கு என்ன காரணம்?

வடக்கு,கிழக்கு மக்களை குறிவைத்ததாகவே பெருமளவு நிதி பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது காணி அளப்பதற்கு யாரும் இடையூறாக இருந்தால் அது அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி மக்களாக இருந்தாலும் சரி பிடித்து உள்ளுக்கு தள்ளுவேன் என வடக்கிற்கு வந்துள்ள புதிய ஆளுநரான ஜீவன் தியாகராஜா கூறுகின்றார். இந்த அரசு இந்த ஆளுநரை காணி பிடிப்பதற்காகவா வடக்கிற்கு அனுப்பியுள்ளது?

**அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ**

ஆட்சிக்கு வரும் கனவை நனவாக்க நீண்ட காலம் காத்திருக்க நேரிடும். எமது நாட்டுக்க எமது சானி என்று தான் முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் கூறுகிறார். உங்கள் அரசு தான் ஆள்கொல்ல இடமளிக்கப்பட்டது. கத்தோலிக்க தலைவர்களுக்கு உயிர்த்த ஞாயிறு தொடர்பான ரகசியங்களை உங்கள் எம்.பிகள் வழங்கியுள்ளனர். ஆனால் குண்டு வெடிப்பு பற்றி தெரிந்தும் மறைந்திருந்தவர்கள் உங்கள் பக்கம் தான் உள்ளனர். மதத் தலைவர்களை சி.ஐ.டிக்கு அழைத்துச் செல்வதாக குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் அவர் தைரியமாக சி.ஐ.டிக்கு சென்று வாக்குமூலம் வழங்கினார். ஆனால் எதிரணியில் உள்ளவர்களுக்கு வயிற்றோட்டம் வந்து நெஞ்சுவலி என ஆஸ்பத்திரியில் மறைந்தார். வங்குரோத்து நிலையில் உள்ளவர்கள் ஆட்சிக்கு வருவதை பற்றி பேசுகின்றனர். சிரிகொத்தவில் பொலிஸ்மா இருந்ததாக உங்கள் தரப்பே தெரிவித்துள்ளனர். உங்கள் அரசில் ரஞ்சன் ராமணாயக்கவுக்கு பாரிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. பெசில் ராஜபக்ஷ, நாமல்ராஜபக்ஷ, உதயகம்மம்பில் போன்றவர்களை சிறையில் அடைத்தீர்கள்.சட்டமா அதிபர் திணைக்களத்தை பயன்படுத்தி வழங்கு தொடர்ந்தீர்கள். அரசியல் பலிவாங்களுக்கே அலரி மாளிகையை பயன்படுத்தினீர்கள். பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அநுர சேனாநயக்கவை சிறையில் அடைத்தீர்கள். அவர் இறந்தார். அவை தவறு என்று கூற தைரியமிருக்கவில்லை.

எமது ஜனாதிபதி சட்டத்தை கையிலெடுக்கவில்லை. உரிய முறைப்படியே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. உயிர்த்த ஞாயிறு தொடர்பில் பலர் கைதாகி வழக்கு தொடரப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாகத் தான் நாம் வென்றதாக கூறுகின்றனர். ஆனால் அதற்கு முன்னர் நடந்த கூட்டுறவு தேர்தலிலும் உங்கள் தரப்பு படுதோல்வியடைந்தது. எமது அரசாங்கம் பலமானது. எமது கட்சிக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம். உங்கள் தரப்பை ஆட்சிக்கு வர எவரும் உதவமாட்டார்கள்.

**ஹர்சன ராஜகருணா எம்.பி (ஐ.ம.ச)**

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது அதனால் இதுதொடர்பான விசாரணையில் கர்த்தினால் மெல்கம் ரன்ஜித் ஆண்டகை உட்பட கத்தோலிக்க மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு, இந்த விசாரணையை சர்வதேச விசாரணைக்குழுவுக்கு வழங்கவேண்டும்

நாட்டில் இடம்பெற்ற தேர்தல்களில் கடந்த தேர்தல்களின்போது இடம்பெற்ற இனவாத தூண்டல் வரலாற்றில் எந்த தேர்தல்களிலும் கண்டதில்லை. கடந்த தேர்தலின் போது கருத்தடை, கொத்துரொட்டி, வைத்தியர் ஷாபியின் கருத்தடை சிகிச்சை என இனவாதத்தை தூண்டும் விடயங்கள் ஊடகங்களில் பரப்பிவந்தார்கள். முஸ்லிம் விரோதத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அரசியல் லாபம் பெற்றுக்கொள்ள முயற்சித்தார்கள். ஈஸ்டர் தாக்குதலின் உண்மையாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளியாக்கப்படுவார்களாஉண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்களா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. ஏனெனில் இந்த விடயம் நாட்டில் அரசியலாக்கப்பட்டிருக்கின்றது அனைத்து இன, மதங்களைச் சேர்ந்தவர்களை இலங்கையர்களாக இணைத்துக் கொள்வதாக இருந்தால் நாங்கள் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும்.

அதனால் கத்தோலிக்க மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருந்தால் இந்த தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்றுக்கு செல்லவேண்டும். முறையான விசாரணை இடம்பெறுவதென்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தவேண்டும். அதற்காக ஸ்கொட்லந்யாட்டுக்காவது இந்த விசாரணையை கொண்டுசெல்ல வழங்கவேண்டும்.

**அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன:**

யுத்தத்தை வெற்றி கொண்ட பீல் மாஸ்டர் சரத் பொன்சேகாவை கடந்த நல்லாட்சி அரசாங்கம் வன ஜீவராசிகள் அமைச்சர் பதவியை வழங்கி அவமதித்துள்ளது.

நாட்டில் ஜே.ஆர். ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாசா, டி.பி விஜேதுங்க ஆகியோரே பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்துள்ளனர். அந்த அமைச்சுப் பதவியை தமது அரசாங்கத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சரத் பொன்சேகாவை ஏமாற்றி வருகிறார்.

சரத் பொன்சேகா தமது ஆளுமையை உணர்ந்து செயற்பட வேண்டும். ஆளுமை இல்லாத வெற்று மனிதர்களுக்கெல்லாம் முட்டுக் கொடுக்க போகக்கூடாது.

வெற்றி, தோல்வி சகஜம். அந்த வகையில் சரத்பொன்சேகா நேரடியாக தேர்தலில் நிற்க வேண்டுமே தவிர அதனை விடுத்து எந்த ஆளுமையும் இல்லாதவர்களுக்கு பின்னால் அவர் செல்ல வேண்டிய அவசியமில்லை. குறிப்பாக சஜித் பிரேமதாசவின் வலையில் அகப்படவேண்டாம் என நான் அவரை கௌரவமாக கேட்டுக் கொள்கின்றேன்.

**மனுஷ நாணயக்கார எம்.பி**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு தொடர்பு இருப்பதாக அஸாத் சாலியை கைது செய்தார்கள். ஆனால் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆதாரம் இருப்பதாகவே அமைச்சரத் சரத் வீரசேகர அறிவித்திருந்தார்.






கொலம்பியாவின் பேரன்குவிலாவில் நடைபெற்ற உலக சட்ட மாநாட்டிற்கு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி நீதி அமைச்சர் அலி சப்ரி கலந்து கொண்டுள்ளார். இம்மாநாடு இரு தினங்கள் நடைபெற்றது. மாநாட்டில் உலக பிரதிநிதிகளிடம் நீதி அமைச்சர் கலந்துரையாடுவதையும் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம்.

## பொலிஸ் மாஅதிபரோ... (03 ஆம் பக்கத் தொடர்)

அதிகாரிகளோ அல்லது பொலிஸ் மா அதிபரோ தீர்மானிக்கின்ற நிலைமையே காணப்படுகிறது இது எந்தவகையில் நீதியாகும்.

சில சம்பவங்களை பார்க்கும் போது பொலிசாரின் கௌரவத்தை பாதிப்பது பொலிஸ் துறைக்கு பொறுப்பான அமைச்சரின் செயற்பாடுகளே.

அதேவேளை நாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட பெருமளவு வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அத்துடன் பொலிஸ் துறையில் பதவி உயர்வுகள் உரிய காலத்தில் வழங்கப்படாமல் உள்ளன.நாட்டின் பாதுகாப்பில் பொலிசார் பாரிய பங்களிப்பை செய்து வரும் நிலையில் அவர்களின் பதவி உயர்வு உட்பட அவர்களுக்கான சலுகைகள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும்.

## கல்முனை தமிழர்... (03 ஆம் பக்கத் தொடர்)

கபளீகரம் செய்யும் நோக்கில் மைதானத்திற்கு குறுக்காக கார்ப்பட் வீதியமைக்க முயற்சி செய்வதையும் அதனால் ஏற்படும் விபரீதங்களையும் உறுப்பினர் ராஜன் அமைச்சரிடம் விளக்கினார்.

அதனையடுத்து மைதானத்திற்கு கிழக்கு புறமாக எவ்வித பாதிப்புமின்றி கார்ப்பட் வீதி அமைக்கப்படும் என்று அமைச்சர் நிமால் லான்சா கூறியதோடு இதுவிடயத்தை உடனடியாக அங்கிருந்தவாறே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எ.எல்.எம்.அலியாருக்கும் தெரிவிக்கப்பட்டது.இதனையடுத்து பொதுமக்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் மைதானப் பிரச்சினையும் தீர்த்து வைக்கப்பட்டது.

## நாடு முழுவதும் விரைவில்...

டிசம்பர் 10 ஆம் திகதி, வரவு செலவு திட்டத்தின் பின்னர் பாராளுமன்ற விடுமுறை வழங்கப்படவுள்ளது.

அதையடுத்து, நாடுமுழுவதும் தாங்கள் புதிய வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்துரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

## ஒமிக்ரொன் திரிபு தொடர்பில்....

நீலிகா மளவிகே தெரிவித்துள்ளார். எந்தத் திரிபு கண்டறியப்பட்டாலும், சுகாதார வழிகாட்டல் கோவையைப் பின்பற்றுவது முக்கியமானதாகுமென்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, ஒமிக்ரொன் கொரோனா வைரஸின் தொற்றை ஏற்படுத்தும் ஆற்றல், டெல்டா மற்றும் பீட்டா திரிபுகளுடன் ஒப்பிடும் போது மூன்று மடங்கு அதிகமாகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் ஒமிக்ரொன் திரிபு முதன்முறையாக கண்டறியப்பட்டுள்ளதையடுத்து, அந்த நாட்டின் கொரோனா நிலவரம் தொடர்பான தகவல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதன்போது இவ்விடயம் கண்டறியப்பட்டதாக தென்னாபிரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை பிரஜைக்கு...

முகாமையாளர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.பிரியந்த குமார என்றழைக்கப்படும் இலங்கையர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக சியால்ன்காகொட் மாவட்ட பொலிஸ் அதிகாரி உமர் சயீத் மாலிக் தெரிவித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தனது தொழில் நிமித்தம் இவர் சியால்கொட்டில் வசித்து வந்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய வீடியோக்களை ஊடகங்கள் வெளியிட்டுள்ளதுடன், அந்த வீடியோக்களில் பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடி கோசம் எழுப்பியதையும் அவதானிக்க கூடியதாகவுள்ளது. இந்த கொலைக்கான காரணம் அந்த நாட்டு பொலிஸார் இன்னும் வெளியிடவில்லை என்பதுடன் இது தொடர்பில் விரைவான விசாரணைகள் நடைபெற்று வருவதாக அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வடக்கில் இந்தியாவை கால்...

உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.இந் நிலையில், இந்த விடயம் குறித்து தனது முக நூலில் பதிவிட்டுள்ள மனோ கணேசன்,

“வட பகுதி தீவுகளில் மறு விளைவு இல்லாத சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இருந்த சீன திட்டம், இந்தியாவின் பாதுகாப்பு ஆட்சேபனை காரணமாக இடை நிறுத்தப்பட்டு விட்டது.

ஆனால், அதற்கு பதிலாக அதே மின் உற்பத்தி கட்டமைப்பை மாலைத்தீவின் 12 ஆளில்லா தீவுகளில் முன்னெடுக்க அந்நாட்டு அரசுடன் சீனா உடன்பாடும் கண்டுள்ளது.

அதேபோல் அதற்கு பதிலாக அதே நம்ம வடக்கு தீவுகளில் மறு விளைவு இல்லாத சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இந்தியா உடனடியாக முன் வர வேண்டும்.

ஏனெனில் இந்த இந்தியாஇலங்கை சீனா கயிறு இழுப்புகளுக்கு மத்தியில் நம் நாட்டுக்கு, சுத்தமான மின்சாரம் தேவை” என தெரிவித்துள்ளார்.

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு...

சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் உயர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே, கடந்த 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் திகதி அலரி மாளிகைக்கருகில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது, பெரும்பான்மையான நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஊழல்வாதிகளென வெளியிட்ட கருத்தினூடாக நீதிமன்ற அவமதிப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டு சட்ட மாஅதிபர் தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை குற்றவாளியாக அறிவித்து அவருக்கு நான்கு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்நிலையில், நீதிபதிகள் தமது கடமைகளை முன்னெடுக்கும் போது சட்டரீதியாக எந்த அதிகாரமுமின்றி அவர்களுக்கு அழுத்தம் கொடுத்தமை அல்லது அழுத்தம் கொடுக்க முயற்சித்தமை தொடர்பில் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்றொரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பில் இவ்வாறு நேற்று உயர்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## பழிவாங்கலுக்கு பதிலா... (03 ஆம் பக்கத் தொடர்)

என்றார். இத்தகைய சந்தர்ப்பத்தில் ஒருவருக்கொருவர் குரோதத்துடனும் வன்மத்துடனும் செயற்படாமல் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

## அனைத்து துரோகத்தையும்... (03 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சின் வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதாக ஏன் அதனை செய்யவில்லை? அந்த தாக்குதலுக்கு முன்பும் அதன் பின்னரும் பல இடங்களில் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதுடன் காத்தான்குடி, நுவரெலியா போன்ற பகுதிகளில் அதனுடன் சம்பந்தப்பட்ட பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

## வழங்கினால் மாத்திரமே... (03 ஆம் பக்கத் தொடர்)

நாடு முழுவதிலும் அனைவருக்கும் பாதுகாப்பு என்ற நிலை இல்லாவிட்டால் அரசாங்கம் எதிர்பார்க்கும் நாட்டை கட்டியெழுப்ப முடியாது.மக்களைப் பிரித்து இனவாதம் மூலம் வாக்குகளுக்காக செயற்படும் நிலை மாற வேண்டும்.

அரசாங்கம் கடந்த எழுபத்தி நான்கு வருடங்கள் பயணித்த பாதையிலிருந்து மாற வேண்டும். அதே பாதையில் தொடர்ந்து பயணித்து பன்மை வாதத்தை உணராத வகையில் நாட்டை உருவாக்க முடியாது. யுத்தம் முடிவடைந்து 12 வருடங்கள் கடந்த நிலையிலும் நாடு இன்னும் கட்டி எழுப்பப்படவில்லை. பங்களாதேஷ் போன்ற நாடுகளிடம் உதவி கேட்கும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. கடந்த 12 வருடங்களில் அரசாங்கம் பெற்றுக் கொண்ட பயன் இதுதான்.

## இலங்கையின் பொருளாதார...

நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்து வெளியிட்டுள்ளன.

இந்தியாவினால் வழங்கப்பட்ட மருந்துகள், உணவுகள் மற்றும் எரிபொருள் கொள்வனவுகளுக்கான கடன் வரிகள், திருகோணமலை எண்ணெய் குதங்களில் ஆரம்பகால நவீனமயமாக்கல் திட்டம்,இலங்கையின் கொடுப்பனவுச் சமநிலைப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான நாணய மாற்று ஒப்பந்தம், ஆகியவை இந்த நான்கு அம்ச அணுகுமுறைக்குள் உள்ளடங்குகின்றன.

## ஒரு இலட்சம் காணி...

காணி உறுதிப்பத்திரமற்ற சகல காணிகளுக்கும் நடமாடும் சேவைகளூடாக ஸ்வர்ணபூமி மற்றும் ஜயபூமி உள்ளிட்ட காணி உறுதிப் பத்திரங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க எழுப்பிய வாய்மூலக் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.1972 ஆம் ஆண்டு காணி சீர்திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததில் இருந்தே சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் காணி உறுதிப் பத்திரம் வழங்கப்படும் என அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன உறுதியளித்துள்ளார்.

இதேவேளை கடந்த காலத்தில் 200 காணி உறுதிப் பத்திரங்கள் காணாமல் போயுள்ளன. ஒரு ஏக்கர் காணி ரூபாய் 500க்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த விடயம் தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

## மாவீரர் தினத்தை நடத்த...

தெரிவித்ததாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மாசல் சரத் பொன்சேக்க எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சு,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

அடுத்த அரசில் எனது பணிகளை நிறைவு செய்ய முழு அதிகாரம் தருவதாகவும் தலைவர் தெரிவித்தார். அடுத்த ஐக்கிய மக்கள் சக்தி அரசொன்று உருவாகும். அதில் நான் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படுவேன். மோசடியுடன் தொடர்புள்ளவர்கள் இருந்தால் எதிர்தரப்பில் மட்டுமன்றி எமது தரப்பில் இருந்தாலும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றார்.

எல்.ரீ.ரீ.ஈ நினைவு கூரல்கள் தற்பொழுது நடைபெறுகிறது. தேசிய மட்டத்தில் முடிவு எடுத்து அவற்றை நிறுத்த வேண்டும். இந்த விடயத்திற்கு எனது கட்சித் தலைவரினதும் கட்சியினதும் அனுமதி உள்ளது. அதனால் பொறுப்புடனே சொல்கிறேன். இதற்கு முற்றுப் புள்ளி வைக்குமாறு பாதுகாப்பு செயலாளரை கோருகிறேன். இறந்தவர்களை நினைவு கூருவதாக சொல்கின்றனர். அதில் பிரச்சினை கிடையாது. அதற்கு பிரபாகரனின் பிறந்தநாளை பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது. பிரபாகரனை அவரது குடும்பத்தினரால் நினைவு கூரமுடியும்.

பிரபாகரனின் பிறந்த தினத்தில் மாவீரர் தினத்தை கொண்டாடுவதை ஏற்க முடியாது. புலிகள் இயக்கத்தை தொடர்புபடுத்தி நினைவு கூருவது சட்டவிரோதம். புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட இயக்கமாகும்.எல்.ரீ.ரீ. ஈ நினைவு கூரலும் ஜே.வி.பி நினைவு கூரலும் ஒன்றல்ல. அரசியல் மாற்றம் ஏற்படுத்தவே ஜே.வி.பி முயன்றது. நாட்டை பிரிக்க அவர்கள் முயலவில்லை என்றார்.

## பாடசாலைகளுக்கு...

02ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, 23ஆம் திகதிக்கு பின்னர், ஜனவரி மாதம் 03ஆம் திகதியே பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.இதற்கு முன்னர், இம்மாதம் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

## அர்ஜுன் இன்றி நடந்த...

அனுமதி வழங்கியுள்ளது. இந்த வழக்கு நேற்று (03) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காட்டுயானை தாக்கி...

து.கஜேந்திரன் (வயது 24) இளம் விவசாயி என அடையாளம் காணப்படுள்ளார்.திருமணமாகாத அவர் தினமும் வயற்காவலுக்காக கோமாரி சென்று வருபவர்.

அப்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.சடலம் பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டுசெல்லப்பட்டுள்ளது.பொத்துவில் பொலிசார் மேலதிக விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

## நாட்டில் எரிவாயு கசிவை...

இதனையடுத்தே எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை இடைநிறுத்துமாறு லிட்ரோ மற்றும் லாப்ஃஸ் நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள கப்பலிலிருந்தும் எரிவாயு மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.உள்ளூர் தர நியமங்களுக்கமைய பொருந்துமாயின் மட்டுமே, அதனைத் தரையிறக்க அனுமதிக்கப்படுமெனவும் இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண தெரிவித்துள்ளார்.

## தூதுவர் பதவியை...

பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

அவர் மெக்சிக்கோ மற்றும் ட்ரினிடாட் மற்றும் டொபாகோவுக்கான தூதுவராகவும் பணியாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மறு அறிவித்தல்வரை....

இதேவேளை, இது தொடர்பில் லாஃப்ஸ் கேஸ் நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.வேகபிட்டியவிடம் நாம் வினவியபோது, தமது நிறுவனத்திற்கு நுகர்வோர் அதிகார சபையோ அல்லது நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சரோ அறிவிக்கவில்லையென தெரிவித்தார். எனவே, தமது எரிவாயு விநியோகம் மற்றும் விற்பனை நடவடிக்கைகள் வழமை போன்று நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## லாஃப் எரிவாயு...

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண எரிவாயு விநியோகஸ்தர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அவ்வாறான உத்தியோகபூர்வ உத்தரவு எதுவும் இதுவரை தமக்கு தெரிவிக்கப்படவில்லையெனவும், இதனால் எரிவாயு விநியோகம் மற்றும் விற்பனை இடைநிறுத்தப்பட மாட்டாது எனவும் லாஃப் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச். வேகபிட்டிய குறிப்பிட்டார். இதேவேளை, (02) முதல் நாடு முழுவதும் எல்.பி எரிவாயு விநியோகத்தை லிட்ரோ எரிவாயு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

## புலிகளின் தங்கம்...

அமைச்சர்களின் செயலாளர்கள் இருவரே, இந்த பகுதியில் தங்கத்தை முன்கூட்டியே இரகசியமாக தோண்டி எடுக்க முயற்சித்துள்ளனர்.

இதற்காக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வீட்டிற்கே சென்று உதவி கோரிய போதிலும் அதற்கு அவர் இணங்க மறுத்துள்ளார். இதேவேளை, தோண்டி எடுப்பதற்காக நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் 25ஆம் திகதிக்கு முன்னதாக இரகசியமாக தங்கத்தை தோண்டி எடுக்க உதவுமாறும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கோரியுள்ளனர்.இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், இப் பகுதிக்கு கடுமையான பொலிஸ், இராணுவ பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நேற்று நீதிமன்ற கட்டளைக்கிணங்க தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் காவல்துறை அதிகாரிகள், தடையவியல் காவல்துறையினர் கிராம அலுவலகர்கள்,படையினர் ஆகியோர் முன்னிலையில் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பீப்பாய் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

## அடுத்த பாதுகாப்பு அமைச்சர்...

பாராளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றினார். முன்னதாக சரத் பொன்சேக்கா எம்.பி தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் பதில் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. பல இனவாதக் கருத்துக்களை முன்வைத்தார். அதுமட்டுமல்ல அடுத்த அரசில் தானே பாதுகாப்பு அமைச்சர் என்றும் கூறினார்.அதாவது கனவுகள் காணும் உரிமை அனைவருக்கும் இருக்கிறது. அனைவரும் கனவுகள் காணலாம். ஆனால் அதற்கும் ஒரு எல்லையுண்டு. எனவே முன்னாள் இராணுவத்தளபதியான சரத் பொன்சேகா அந்த எல்லைக்குள்ளேயே கனவு காண வேண்டும். .தானே அடுத்த பாதுகாப்பு அமைச்சர் என்று அவர் கனவின் எல்லை கடந்து சென்று விட்டார் என்றும் தெரிவித்தார்.

## கண்டியில் சந்தேகத்தின் ...

நேற்று முன்தினம் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் கண்டி மாவட்ட கிளை அலுவலக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குண்டு தாக்குதலுக்கு முன்னர் அம்பாந்தோட்டை சிப்பிக்குளம் பகுதியில் நடத்திய பயிற்சி முகாமில் இவ் இளைஞர் பங்கேற்றதாகவும் கூறப்படுகிறது. பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் விசாரணைகளில் வெளிப்படுத்திக்கொள்ளப்பட்ட தகவல்கள் மற்றும் கிடைத்துள்ள தகவல்களை மையப்படுத்தி இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இளைஞன் ஹம்பாந்தோட்டை சிப்பிக்குளம் இரகசிய முகாமில், பயங்கரவாதி சஹ்ரானின் அடிப்படைவாத நடவடிக்கைகள் தொடர்பில் பயிற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் சந்தேக நபர்களுடன் அவருக்கு நெருங்கிய தொடர்புகள் இருந்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் உதவி ஒத்தாசைகளை முன்னெடுத்தமை, தகவல்களை மறைத்தமை தொடர்பில் சந்தேக நபருக்கு எதிராக சி.ரி.ஐ.டி.யின் சிறப்புக்குழுவினர், பயங்கரவாத தடை சட்டத்தின் 9 (1) ஆம் அத்தியாயத்தின் கீழ் 90 நாள் தடுப்புக் காவல் உத்தரவைப் பெற்று மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## நாடு முழுவதும் நேற்று ஆறு....

தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

மின்துண்டிப்பினால் பாராளுமன்ற அமர்வுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. பாராளுமன்றத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.பாதுகாப்பு அமைச்சின் விவாதம் நடைபெறும் நிலையில் இந்த மின் துண்டிப்பு நடந்தது.

பாராளுமன்றத்திற்கு தனியான மின்சார இணைப்பு வழங்கப்பட வேண்டும். மின்துண்டிப்பு நிலையில் சபை நடவடிக்கைகளை முன்கூட்டி நிறைவு செய்ய எதிரணியும் உடன் பட்டது என்றார்.

நாசகார வேலையினாலா இந்த துண்டிப்பு இடம்பெற்றதென எதிரணி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ மின்துண்டிப்பு தொடர்பில் ஆராயப்படுவதாக தெரிவித்தார்.

நாடு முழுவதும் நேற்று ஏற்பட்ட சுமார் 06 மணி நேர திடீர் மின்சாரத் தடை காரணமாக பாராளுமன்ற செயற்பாடுகளும் தடைப்பட்டதோடு இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கன் (லிப்டுக்குள்) மின்தூக்கிக்குள் சிக்கியதோடு அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

பிரதான மின்விநியோக கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே நாடு முழுவதும் நேற்று மின்சாரத் தடை ஏற்பட்டது.

ஜெனரேட்டர்கள் பயன்படுத்தப்பட்டு பாராளுமன்ற அமர்வுகள் தொடர்ந்து நடத்தப்பட்டன.

பிற்பகல் 3.10 மணியளவில் ஜெனரேட்டர் செயற்பாடுகளும் தடைப்பட்டன. இதனால் பாரளுமன்றம் முழுவதும் மின் இணைப்பு தடைப்பட்டது.

இதனால் சபை அமர்வுகள் தவிர்ந்த அனைத்து செயற்பாடுகளும் தடைப்பட்டன. ஆனால் வரவு செலவுத்திட்ட விவாதம் மாத்திரம் மின்தடைக்கு மத்தியிலும் தொடர்ந்து நடைபெற்றது இதற்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பாராளுமன்ற அமர்வுகளை முன்கூட்டி நிறைவு செய்வது தொடர்பாக ஆராயப்பட்ட போதும் தொடர்ந்து அமர்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் தடைப்பட்டிருந்த மின் விநியோக நடவடிக்கைகள் 6 மணித்தியாலங்களின் பின்னர் வழமைக்கு திரும்பியுள்ளதாக மின்சாரசபை தெரிவித்தது. இந்த நிலையில், அநுராதபுரம், ஹபரன, லக்ஸபான, அதுறுகிரிய, கொத்மலை, கட்டுநாயக்க மற்றும் பியகம ஆகிய பிரதான மின்விநியோக மார்க்கங்களின் நடவடிக்கைகள் இவ்வாறு வழமைக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்ட மின் விநியோகத்தடையானது மின் பொறியியலாளர் சங்கத்தின் திட்டமிடப்பட்ட சதியாக இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.மின்சார மீள் இணைப்பு பணிகளை மின் பொறியியலாளர் சங்கம் திட்டமிட்டே இழுத்தடிப்பு செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, மின் பொறியலாளர் சங்கம் மேற்கொண்டு வந்த சட்டப்படி கடமையாற்றும் தொழிற்சங்க நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சௌம்ய குமாரவடு தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்குள் ஊடுருவியது...

ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒமிக்ரொன் கொவிட் திரிபு தொற்றுக்குள்ளான நபரொருவர் முதல் முறையாக கடந்த நவம்பர் 26 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டார்.

இதனையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தென்னாபிரிக்கா, பொஸ்வானா, லெசோதோ, நமீபியா, சிம்பாப்வே மற்றும் சுவாஸிலாந்து ஆகிய ஆபிரிக்க நாடுகளிலிருந்து இலங்கை வர, கடந்த நவம்பர் 27 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் தடை விதிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

அவ்வாறே, மேற்குறிப்பிட்ட நாடுகளிலிருந்து அன்றைய தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் இலங்கை வந்த சுற்றுலா பயணிகள் தொடர்பான தகவல்களையும் சுகாதார அமைச்சு திரட்டியதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் சமித கினிகே தெரிவித்தார்.

இவ்வாறு நாட்டுக்கு வந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்களின் உடல்நலம் குறித்தும் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, அவர்களில் எவருக்கும் இதுவரை தொற்று உறுதியாகவில்லை.

இந்நிலையில், வெளிநாடுகளிலிருந்து திரும்பியவர்களுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், மரபணு சோதனைக்காக மாதிரிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டன.

அதன்போது, மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போதே, தென்னாபிரிக்காவிலிருந்து நாட்டுக்கு வந்த இலங்கையர் ஒருவருக்கு ஒமிக்ரொன் கொவிட்19 திரிபு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவர் தனிமைப்படுத்தலிலிருந்தவர் என்பதால் வீண் அச்சமடைய தேவையில்லையென்றும், அவரது குடும்பத்தினரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி கொவிட் பரிசோதனைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உரிமைகளைப் பாதுகாப்போம்!



உயிரோட்டமான சிந்தையால்
உலகை ஆள்கிறது எழுத்து!
உண்மையின் விந்தையால்
உள்ளத்தை கவர்கிறது கருத்து!
உண்மையை எடுத்துரைத்து
உணர்வுகளை நியாயப்படுத்தி
உவகைகளைச் சொந்தமாக்கி
உணர்ச்சிகளுயிர் பெறுகின்றன!

உணவு வேண்டிப் போராடி
உடல் மெலிந்து திண்டாடி
உயிர் காக்கச் சூறையாடி
உலகில் சிலரது வாழ்க்கை!

உயிர் வாழப் போராட்டம்
உடைமை தேடித் திண்டாட்டம்

உரிமை கோரும் காலகட்டம்
உதவிகளை வழங்கிடுவோம்!

உதவிக்கரம் கேட்போரை
உதாசீனம் செய்யாமல்
உன்னதமாய் மதித்திடுவோம்!
உரிமைகளைப் பாதுகாப்போம்!

கவியரசி
எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யால

# மழை



பூமியில் சூரியனின் ஒளிப்படுக்கையால்
பார் நீருதிரம் வியர்வைத்துளிகளாகி
மேலெழ வானம்
தன் கனத்தால்
தாங்க முடியாது
அழத்தொடங்கியது
அதிகமானதால்
மனிதர்கள் தாங்க
முடியாது அல்லலுறும்
அவலங்கள்

நாட்டிற்கு நலன் சேர்க்கும்
நன்னிலம்
மலைநாட்டில்
மண்ணீர் அதிகரிக்க
தாங்க முடியாதென்று ஒட்டி உறவாடிய
மலை நண்பனை பிரிந்ததாலே
மண்சரிவென்று
மாந்தர் மடிகின்றனர்
முதிர்ந்து தல்லாடிய லயனறைகளோடு

படிவரிசையாக
பார்ப்பதற்கு அழகாக காட்சிதந்த
பயிர்வகைகள்
பள்ளத்தாக்கில் நீரை முந்தி
பாய்ந்த காட்சி
பயிரிட்டோரை
பாடாக்கியது
பாதைகலெள்ளாம்
பாறைகல் படர்ந்தாப்போல்
பயணிப்போர் படும் துயரம்
தொடர்கிறதே
பனிக்கால குளிர் போல
பருவம் பருவமாய்

ஊற்றெடுக்கா நீர்
ஊரெல்லாம் சுற்றி
ஊமை போல்
ஊருக்குள் நுழைந்ததுவே

ஆறெது ஊரெது வயலெது என
அறியாது முகவரி தேடி
அலைந்ததால்
அல்லலுரும் எம்மவர்கள்
ஆற்றின் வழியினை
அழகான கட்டடமாய்
அமைத்ததனால்
ஆழி கடல் செல்ல முடியாது
அடைக்கலமாய் எம்மிடமே
தொடர்கிறதே
துயர்
ஏழைகள் கனவு போல்

தோப்பூர் எம்.எம்.நௌபீக்

# கடனும் மனைவியாகிறது



உழைப்பதிலான
பேரானந்த பானத்தை
உல்லாசமாய் உறிஞ்சிக் குடிக்கும்
உல்லாசப் பறவை கடன்

வாங்கும்போது தெய்வமாகவும்
கொடுக்கும்போது சாத்தானாகவும்
மனதுக்குள் உருவகமாகும்
மாயக்கண்ணாடி

ஒரு கன்னிப் பெண்ணின்
காதலைப்போல
போராட்டத்துடன்
கிடைக்கப்பெற்றாலும்
விவாக ரத்தாகிப்போன
மனைவியைப்போல்
மனம்மாறி திரும்பி
வந்து சேர்வதுபோல்
மறுபடியும் திரும்பி
வந்து விடுகிறது
வட்டி என்னும் குழந்தையோடு.

இரண்டிலும்
கட்டுதல்கள் இருப்பதாலோ என்னவோ
கட்டிய மனைவியைப்போல்
கட்டிய வட்டிக்குப் பின்னாலும்
விட்டுப்போகாமல் இருந்துவிடுகிறது
சில கடன்கள்.

மொத்த அன்பும்
புகுந்த வீட்டுக்கு என்று
காட்டிக்கொண்டாலும்
பிறந்தவீட்டுக்கான
அன்பின் விகிதத்தை
மறைத்து வைத்திருக்கும்
மனைவியைபோல
மொத்த தொகையும்
நமக்கென்றாலும்
வட்டியின் வீதம் கழிந்த
மீதி மட்டும் கைகளில் என்பதால்
கடனும் மனைவியாய்

என்னதான்
சண்டைபிடித்து
தாய் வீடு போனாலும்
கணவனே கண் கண்ட தெய்வமென
திரும்பி வந்துவிடும்
ஒரு நல்ல மனைவியைபோல
விட்டுப்போனாலும்
மறுபடியும் எப்படியாவது
வந்து சேர்ந்து விடுவதால்
இந்த கடனும் மனைவியாகிறது,

மெய்யன் நடராஜ்

# கண்கள் பனிக்குது!



இழப்பதற்கு இனி
என்ன இருக்கு
கண்ணீரில் நனைகிறது
பெத்தமனங்கள்
எத்தனை கனவுகள்
எத்தனை கற்பனைகள்
சுமந்துகொண்டு
புத்தகப்பையுடன்
சென்ற நீங்கள்
கபனுடையுடன்
திரும்பியதேனோ!

கண்கள் பனிக்குது
கல்புகள் பதறுது
பெற்றதாய்
பொறுப்பாளா!
இல்லை
பின் சென்றுழைத்த
தந்தை மறுப்பாரா!

கலைந்த கனவுகள்
இழந்த நிம்மதி
போன உயிர்
திரும்ப வருமா!
இல்லை
அழுதுதான் பலன்
கிடைக்குமா!

பெரிதுவத்துப் பெற்ற
பிள்ளை
பிஞ்சிலே இழந்ததை
விஞ்சியே விசும்பலாமா!

நித்திரை இழந்து
நிம்மதி கலைந்து
வளர்த்த கண்மணிகள்
கிள்ளைமொழியுடன்
அன்ன நடை பயின்ற
விதம்
அனைத்தும் மறந்து
விடுமா!

அல்லாஹ்
தந்த பரிசை
அவனே திருப்பிட்டான்
நாமும் வாடலாமா
தினமும் இதையேற்க
வாய்ப்பைத் தருவானா!

நாளை மஹ்ஸரில்
எம்குழந்தை சந்திக்க
ஏற்ற வழி தருவாயா
எங்கள் நாயகம்
முகம்மது பெயரால்
கேட்கிறோம்
இதை ஏற்பாயா!

தோப்பூர் சிராஜுதீன்
நற்பிட்டிமுனை, கல்முனை.

**வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை**
**பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல்**
**வாங்கல் சம்பந்தமான கூட்டுறவு சங்கம்**

## 44 ஆம் ஆண்டு நிறைவு மகா சபை

**அங்கத்தவர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் சமர்ப்பித்தல்**

**மேற்படி ஆண்டுநிறைவு சபை சார்பாக அங்கத்தவர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள்**

**2021 டிசம்பர் 25ஆம் திகதிக்கு முன் எமது அலுவலகத்திற்கு கிடைக்கச் செய்யுங்கள்**

கௌரவ தலைவர் டபீள்யூ கே.எல்.கே.லியனகே
இல-912/1, மருதானை வீதி,
கொழும்பு - 08

தொ.பே.இல - 0112687476, 0112687549
0112699295

பெக்ஸ் : 0112687477

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
செயலாளர்
டபிள்யூ.ஏ.ஐ.எல்.வீரசிங்ஹ
2021.12.02

# பூவாப்பா



மருதமும் நெய்தலும் ஒருங்கே அமைந்த
மண்ணாம் மருதமுனை அம்
மண்ணின் மைந்தனாய் மக்களின் நண்பனாய்
மண்ணில் வந்த ஒரு நிலவு பூவாப்பா

வாழ்க்கைத் துணையாய் ஹபீபாவையும்
வாரிசுகளாய் ஆறு பிள்ளைகளையும்
வாழ்க்கையின் முதுமையில்
பத்துப் பேரப்பிள்ளைகளையும்
வாழ்ந்து கொண்டிருக்கும் எமது பூவாப்பா

அகவை 74 ஐ எட்டிய பூவாப்பா
கற்பித்தலில் மேதையாய் இன்று
முள்ளிப்பொத்தனை போற்றும் முதல்வனாய்
கல்வியிலும் கல்பிலும் சிறந்து விளங்கினீர்

பெற்ற பிள்ளைகள் நன்றே கரைசேர
பெறாத பிள்ளைகளோ பவனி எங்கும் உலா வர
பெருமிதம் கொண்டு பாரினிலே நீர் நடக்க
பெருமையோடு நாம் உறைப்போம் பூவாப்பா

எம்.ரிஸ்னியா அலீம்
இனிகலை

**ஏறாவூர் நகர சபையின் புதிய சந்தை**
**வியாபாரிகளுக்கான மீள் விண்ணப்பம்**
**கோரல் தொடர்பான இறுதி அறிவித்தல்**

2021.11.05 ஆம் திகதிய 2253 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் மூன்று மொழிகளிலும் பகுதி IV (ஆ) யில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய சந்தை தொடர்பான விளம்பரத்திற்கமைவாக எதிர்வரும் 2021.12.31 ஆம் திகதிக்கு முன் இச் சந்தையில் வியாபாரம் செய்வதற்கான குத்தகை உரிமையினை பெற்றிருந்தவர்கள் இனிவரும் காலங்களில் தொடர்ந்து குறித்த சந்தையில் வியாபாரம் செய்ய விரும்பின் குத்தகை உரிமையை பெற்றிருந்தமை தொடர்பிலான உரிய ஆவணங்களை அலுவலக நேரத்தில் சபையின் செயலாளரிடம் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தவறும் பட்சத்தில் குறித்த சந்தையின் குத்தகை உரிமையினை இழந்தவறாக கருதப்படுவர் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**M.S. நழீம்,**
**தவிசாளர்,**
**ஏறாவூர் நகர சபை.**

# மழலையானவள்



கொஞ்சும் தமிழும்
அதிலே கூடுதல் எழிலும்
சேர்ந்ததொரு ஹைக்கூ ஆனாள்
மெல்லுடல் இனியவளானாள்
மெல்லிசைக்கு மொழியவளானாள்
மொத்தத்தில்
அன்பாயொரு சிறு முத்தத்தில்
இதயம் கவ்விட்ட எந்தன்
கலைமகளானாள்

செல்லமாய் கோபம் கொள்கிறாள்
செந்தாமரையின் வெட்கத்தின் சாயல்
விழி சுருட்டி முகம் சுழிக்கிறாள்
ஓராயிரம் ஓவியங்களின்
ஒன்றுகூடல் ...

இஷாதா முஹம்மத்
ஏரூர் கவிமொழி

திகதி 02.12.2021 வியாழக்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4604
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 10,051,530.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 7 1 5 2 8 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 21,412,380.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2899
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,411,200.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 11 26 31 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 75,776,011.36

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 952
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,512,020.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 156,883,970.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள் 52 57 73 78


தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 634
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,885,060.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 01 25 51 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 86,085,743.60

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1175
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,194,540.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 8 3 3 0 0 6
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்ட்டத்தை கொண்டு வருகின்றது.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,685,055.60

02.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 583,452
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 26,054,350.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 02 ரூ. 100,000.00 பரிசுகள 31

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



# பேராசிரியர் கலாநிதி எஸ். எம். எம். மஸாஹிருக்கு பாராட்டும் கௌரவமும்

## அக்குறணை கல்வி மேம்பாட்டுக்கான ஐக்கிய அமைப்பினர் ஏற்பாடு

அக்குறணை கல்வி மேம்பாட்டுக்கான ஐக்கிய அமைப்பினரின் ஏற்பாட்டில் தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி எஸ். எம். எம். மஸாஹிர் நளிமிக்கு பேராசிரியர் பட்டம் வழங்கப்பட்டதைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நாளை

ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணிக்கு அஸ்ஹர் தேசிய பாடசாலையின் அதிபர் ஏ. எல்.அன்வர் தலைமையில் இடம்பெறும்.

ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் எப். எம். பாஸில் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் எம். எம். எம் நாஜிம், விசேட பேச்சாளராக தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறைப் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா, வாழ்த்துரையினை முன்னாள் அக்குறணை முஸ்லிம் பாலிகா கல்லூரி அதிபர் ரிஹானா செய்ன், முன்னாள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஆணையாளர் எஸ். எச். எம். சபீக், பேருவளை ஜாமியா நளிமியா கலாபீடத்தின் பகுதி நேர விரிவுரையாளர் உஸ்தாத் எம். ஏ. எம். மன்சூர், அக்குறணை பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி எம். எப். எம். அஸ்மி, அக்குறணை ஜம்மியயதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி எம். ஏ. எம். சியாம் (யூசுபி) ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நிகழ்ச்சித் தொகுப்பினை பெரோஸ் மஹ்ரூப்பும் ஏற்புரையினை தென்கிழக்குப் பல்கலைக்கழக அரபு மற்றும் இஸ்லாமிய கற்கை பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ். எம். எம். மஸாஹிரும் ஏற்பாட்டுக் குழுவின் செயலாளர் எம். ஜே. எம். பைசல் நன்றியுரையினையும் நிகழ்த்துவர்.

விழாவில் விசேட அம்சமாக வரவேற்பு கீதம், வாழ்க்கை வரலாறு தொடர்பான காணொளி காட்சிப்படுத்தல், மலர் வெளியிடுதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

### பேராசிரியர் எஸ்.எம். எம். மஸாஹிர்

தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் என்ற வகையில் பேராசிரியர் எஸ். எம். எம். மஸாஹிர் அறிவுப்புலமையும் ஆளுமையும் அமைதியும் அடக்கமும் தன்னகத்தே கொண்டவர் என்பதை கல்வி உலகம் நன்கறியும். இது வெறும் புகழ்ச்சியல்ல.

பேராசிரியர் பதவித் தகைமை பெற்றுக் கொள்வது என்பது சாதாரண விடயமல்ல. கல்வித் தகைமைகளில் அதி உச்ச பதவி பேராசிரியர் பதவியாகும்.நமது அக்குறணை மண்ணுக்கு கல்வித் துறையின் பால் பன்முக மேதா விலாசத்தைப் பெற்றுக் கொடுத்த உன்னதமான பேராசிரியர் மஸாஹிரை பாராட்டி கௌரவிப்பதில் ஊர் சமூகம் பெருமிதம் கொள்கின்றது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப் பீடத்தின் பீடாதிபதியாகக் கடமையாற்றிவரும் கலாநிதி எஸ். எம்.எம். மஸாஹிர் இஸ்லாமிய கலாசாரப் பேராசியராவார். 13/12/2019 முதல் பதவி உயர்வு பெற்றார்,குறித்த துறையில் பேராசிரியரான முதல் இலங்கைப் பிரஜையுமாவார். அத்துடன் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் முதலாவது பேராசிரியர் மற்றும் ஜாமிஆ நளீமிய்யா பட்டதாரிகளுள் முதலாவது பேராசிரியர் என்ற மகுடத்தையும் பெற்றுள்ளார்.

கண்டி அக்குறணையில் 1967 மேமாதம் 09 ஆம் திகதி பிறந்த இவர்,மர்ஹூம்களான செய்யத் முஹம்மத், ஸபா உம்மா தம்பதியினரின் பத்துப் பிள்ளைகளுள் நான்காவது புதல்வராவார். இஸ்லாமிய அடிப்படைகளைப் பேணிய ஒரு சாதாரண வியாபாரியான இவரது தந்தை, தனது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் கொண்டிருந்த அதீத ஆர்வமே இலங்கையின் பிரபலமான மார்க்கக் கல்வியகமான ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் இவர் இணைவதற்கான முக்கிய தூண்டுகோலாக அமைந்தது. மத்திய மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்த இவரது சிறிய தந்தையான மர்ஹூம் என்.எம்.எம். இஸ்ஹாகின் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இவரது கல்வி வாழ்க்கைக்குத் துணை நின்றன.

1997இல் பாதிமா நிபாஸா என்பவரைக் கரம்பிடித்த இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். இவரின் மூத்த புதல்வி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டதாரியாவார்.

பேராசிரியர் மஸாஹிர் அக்குறணை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலத்தில் (அப்போது அது ஒரு கலவன் பாடசாலை) தனது ஆரம்பக் கல்வியைக் (தரம் 15வரை) கற்ற இவர், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தார். அத்துடன் தனது இரண்டாம் நிலைக் கல்வியை (தரம் 610 வரை) அக்குறணை அஸ்ஹர் கல்லூரியில் கற்ற இவர், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றார். 1984 ஆம் ஆண்டு ஜாமிஆ நளீமிய்யா கலா பீடத்தின் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி, அங்கு கற்பதற்குத் தெரிவானார். இலங்கையின் பிரபல இஸ்லாமிய அறிஞர்களான கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, உஸ்தாத், எம்.ஏ.எம். மன்ஸூர், அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத், அஷ்ஷெய்க் சீ. ஐயூப் அலி, மர்ஹூம் அஷ்ஷெய்க் கைருல் பஷர் போன்றோரின் வழிகாட்டல்களின் கீழ் பண்பாடும், அறிவும், ஒழுக்கமும் நிறைந்த ஆன்மீகச் சூழலில் சுமார் ஏழு வருடங்கள் (1984 1991) இக்கலாசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்.



இவர் நளீமிய்யாவில் படித்த காலப்பகுதி இவரது வாழ்வில் பல்வேறு திருப்புமுனைகளை ஏற்பட்டது இக்காலப் பகுதியிலேயே இவர் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றியதோடு, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விசேட கலைமாணிப் பரீட்சைக்கு வெளிவாரி மாணவராகத் தோற்றி, இரண்டாம் தர உயர்தரத்தில் (Second Class Upper Division) சித்தியெய்தினார். இதுவே இவரது பல்கலைக்கழக வாழ்வுக்கு அடியெடுப்பாக அமைந்தது. இக்கால கட்டத்தில் நளீமிய்யாவின் அதிபராகப் பணியாற்றிய பங்களாதேசை சேர்ந்த ஷஹீதுல்லாஹ் கௌஸர், உப அதிபராக இருந்த மர்ஹூம் மௌலவி புகாரி (புத்தளம்) ஆகியோர் இவரது கல்வி வளர்ச்சியில் காத்திரமாகப் பங்களித்தோராவர். ஜாமிஆ நளீமிய்யாவின் இறுதிப் பரீட்சையில் முதல் தரத்தில் (Lecturer [Probationary]) சித்தியடைந்து, அக்கலாசாலையில் சுமார் நான்கு வருடங்கள் (1991-1995) உதவி விரிவுரையாளராகவும் கடமையாற்றிய இவர்,மாணவர்களின் பல்துறைசார் ஆளுமை விருத்தியில் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கினார்.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் அயராத முயற்சியினால் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உருவாக்கப் பட்டபோது அதன் ஸ்தாபக விரிவுரையாளர்களுள் ஒருவராக 1995ஆம் ஆண்டு இணைந்து கொண்டார். 1997ஆம் ஆண்டு அறபு மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாதோருக்கு அறபு மொழியைக் கற்பித்தல் தொடர்பாக பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கையைக் கற்பதற்காக புலமைப் பரிசில் பெற்று சவூதி அரேபியா, ரியாத் நகரில் அமைந்துள்ள மன்னர் சுஊத் பல்கலைக்கழகத்திற்குச் சென்று, அதில் உயர் பிரிவு, இரண்டாம் நிலையில் (Second Class Upper Division) சித்தி பெற்று, நாடு திரும்பினார். 1998இல் தகுதிகாண் விரிவுரையாளராகத் (Senior Lecturer, Grade II) தெரிவு செய்யப்பட்டு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலேயே தொடர்ந்து பணியாற்றினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது முதுதத்துவமாணிக் கற்கைக்காகப் (PhD) பதிவு செய்து கொண்ட இவர்,மர்ஹூம் கலாநிதி காமில் ஆசாத்தின் மேற்பார்வையில் அறபுத் தமிழில் வந்துள்ள அல்குர்ஆன் விரிவுரைகள் தொடர்பாக, சுமார் 700 பக்கங்களைக் கொண்ட ஓர் ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்து, 2006ஆம் ஆண்டு அக் கற்கையைப் பூர்த்தி செய்தார். அதே ஆண்டிலேயே இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளர், 2ஆம் தரத்திற்கு (Senior Lecturer, Grade 11) பதவி உயர்த்தப்பட்டார்.

2011ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் தனது கலாநிதிப் பட்டப்படிப்பிற்காக (Phd) மலேசியா, கோலாலும்பூரில் அமைந்துள்ள மலாயா பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்ட இவர், இஸ்லாமிய காப்புறுதி (தகாபுல்) தொடர்பாக தனது ஆய்வினை மேற்கொண்டு, 2017ஆம் ஆண்டு அத்துறையில் தனது கலாநிதிப்



பட்டத்தை பெற்றுக் கொண்டார். தகாபுல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையும் இவரையே சேரும். இதற்கிடையில் 2012ஆம் ஆண்டு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இவருக்கு முதுநிலை விரிவுரையாளர், முதலாம் தரமும் (Senior Lecturer, Grade I) கிடைத்தது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் துறையின் தலைவராக இவர் இரு முறை நியமிக்கப்பட்டதோடு, 2014 முதல் இன்று வரை தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப் பீடத்தின் பீடாதிபதியாக அப்பீட உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

Interactive Social Renaissance Assembly (ISRA), அக்குறணை ஜம்இய்யதுல் உலமா மற்றும் அக்குறணை பைத்துஸ் ஸகாத் போன்ற நிறுவனங்களில் இணைந்து பணியாற்றிய இவர், தற்போது மானிட மறுமலர்ச்சிக்கான சங்கம் Human Renaissance) அக்குறணையில் சமூக மற்றும் கல்வி மேம்பாட்டுக்கான அமைப்பு (Association for Social & Educational Development in Akurana [ASEDA] நீதி மற்றும் மேம்பாட்டுக்கான மக்கள் இயக்கம் People's Movement for Justice and Development [PMJD]) அக்குறணை ஆய்வு நிறுவகம் (ARF), இமிஷ்காத் இஸ்லாமிய ஆய்வு நிறுவனம்,அல் முஃமினாத் பெண்கள் அறபுக் கல்லூரி போன்ற பல்வேறு கல்வி, சமூக மேம்பாட்டு நிறுவனங்களில் உறுப்பினராவும் பல்வேறு பதவிகளிலும் சேவையாற்றி வருகின்றார். அத்தோடு இவர், சமூகம் வேண்டி நிற்கும் பல்வேறு தலைப்புக்களில் சொற்பொழிவுகளையும் கருத்தரங்குகளையும் மேற்கொண்டுள்ளதோடு எழுத்து,ஆய்வுத் துறைகளில் ஈடுபாடு காட்டி வருகின்றார். இது வரையில் 20இற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ள இவர் கணிசமான ஆய்வுக் கட்டுரைகளை தரமான உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைகளில் பதிப்பித்துள்ளதோடு, தேசிய, சர்வதேசஆய்வு மாநாடுகளில் அவற்றை சமர்ப்பித்துமுள்ளார்.

தென்கிழக்கு அறப் பீடத்திற்கு புதியதொரு பரிமாணத்தைக் கொடுத்தவர். எந்த விடயத்திலும் தனித் தன்மையான பார்வையை கொடுக்கும் திறமை இவருக்கு உண்டு. இத்தகைய பன்பமுக ஆளுமை கொண்டவரை அக்குறணை சமூகம் பாராட்டுவதையிட்டு பெருமிதம் அடைகின்றோம். இவரது சேவைகள் மென்மேலும் தொடரவேண்டும் எனவும் அதனூடாக சமூக எழுச்சியும் மேம்பாடும் ஏற்படவேண்டும் எனவும் வல்ல இறைவனை நாம் பிரார்த்திக்கின்றோம்.

## பேராசிரியரின் உயர்ச்சிக்கு நானும் பங்களிப்பு செய்ததை பெருமையாக கருதுகிறேன்



பேராசிரியர் கலாநிதி எஸ். எம்.எம். மஸாஹிரை கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படும் இந்த நினைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். பேராசிரியர் மஸாஹிருக்கும் எனக்கும் கடந்த ஏழு வருடங்களாக மிக நெருங்கிய உறவு உண்டு. 2015ஆம் ஆண்டு நான் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு உபவேந்தராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாம் இருவரும் அப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக இணைந்து பணியாற்றியது மாத்திரமன்றி முஸ்லிம் சமூகத்தின் கல்வி மற்றும் சமூக மேன்பாட்டுக்காகவும் உழைத்திருக்கின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி 1921ஆம் ஆண்டு ஆரம்பமான போதும் 1942ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகம் தோற்று விக்கப்பட்டபோதும் அறபு, இஸ்லாமிய நாகரீகக் கற்கைகள் அக்காலப் பகுதிகளில் பல்கலைக்கழகக் கலைத்திட்டத்திற்குள் உள்வாங்கப்படவில்லை. எனினும் பேராதனைப் பல்கலைக்கழகம் உருவாகி சிறிது காலத்திற்குள்ளேயே, 1945இல் அங்கு கீழைத்தேய கற்கைகள் பீடத்தின் (Faculty of Oriental Studies) ஒரு துறையாக அறபுத் துறை (Department of Arabic) ஸ்தாபிக்கப்பட்டது. அத்துறையில் இஸ்லாமிய நாகரீகக் கற்கைகள் இடம்பெற்றிருந்தாலும் 1972ஆம் ஆண்டுகளில் அமைந்திருந்த இலங்கைப் பல்கலைக்கழக வித்தியாலங்கார வளாகத்தில் (Vidyalankara Campus of University of Sri Lanka) அறபுத் துறையின் கீழ் இஸ்லாமிய நாகரீகம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் அது 1979இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அறபு, இஸ்லாமிய நாகரீகத் துறையாக Department of Arabic and Islamic Civilization) மாற்றியமைக்கப்பட்டது. 1975களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், 1986இல் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், 1993 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும், 1995 இல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் அறபு, இஸ்லாமியக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2005ஆம் ஆண்டு இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப் பீடம் என்ற தனித்துவமான பீடமொன்றும் உருவாக்கப்பட்டது.

அறபு, இஸ்லாமிய கற்கைகளுக்கு இருந்த போதிலும் கூட 1956இல் பாகிஸ்தானியப் பிரஜையான எம்.ஏ. இமாம் என்பவர் மாத்திரமே அறபுத் துறையில் பேராசிரியராக இருந்தார். இன்று வரை இத்துறையில் ஒரு பேராசிரியர் தோன்றவில்லை. ஏனைய சமயங்கள் சார்ந்த கற்கைகளிலும் பல பேராசிரியர்கள் பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக இஸ்லாமிய கற்கைகள் துறையில் ஒரு பேராசிரியரை உருவாக்க முடியாமல் இருந்தது. தென்கிழக்குப் பல்கலைக்கழக, கலை, கலாசாரப் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி மர்ஹூம் கே.எம். எச். காலிதீன் கூட துணைப் பேராசிரியராகவே இருந்தார். மறைந்த கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, கலாநிதி எம்.ஐ.எம். அமீன் போன்ற சிறந்த கல்விமான்கள் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போதும் அவர்களாலும் இந்த உயரிய இடத்தை அடைந்து கொள்ள முடியவில்லை. இதனால் இஸ்லாமிய கற்கைத் துறையில் காணப்படும் இந்தப் பாரிய இடைவெளியை நிரப்ப வேண்டியது எனது கடமை என நான் எண்ணினேன். அதற்கு மிகவும் தகுதியானவர் கலாநிதி மஸாஹிர் என இனங்கண்டு, அவரை இந்த உயர் பதவிக்கு விண்ணப்பிக்குமாறு வேண்டினேன். பெரும் சவால்களுக்கு மத்தியில் அவருக்கு அப்பதவி உயர்வு கிடைத்தது. அதன் பிரதிபலனாக இலங்கையில் இத்துறைசார் முதலாவது பேராசிரியர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் முதலாவது பேராசிரியர்,நளீமிய்யா பட்டதாரிகளுள் முதலாவது பேராசிரியர் என்ற பெருமையை அவர் பெறுகின்றார். இந்த கௌரவத்தை அவர் பெறுவதற்கு நானும் துணையாக இருந்திருக்கின்றேன் என்ற வகையில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்.

பேராசிரியர் மஸாஹிர் பிறந்தமான அக்குறணையில் அவரை கௌரவிப்பதனூடாகப் பெருமையடைகின்றது. ஊரில் உள்ள எல்லா அமைப்புகளும் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களை நான் பாராட்டுகின்றேன். அவர்களின் இம்முயற்சிக்கு அல்லாஹ் தஆலா நிறைந்த நன்மைகளை வழங்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர்
**எம்.எம்.எம். நாஜிம்,**
முன்னாள் உபவேந்தர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்

## கல்வி ஞானமும், அறிவுத்திறனும் மேலும் விருத்தியடைய வேண்டும்

மாபெரும் சபைதனிலே நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும், என்ற மகுடத்திற்கேற்ப மலையகத்தின் திருத்தலமாம் எங்கள் அக்குறணை அன்னை ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வன் பேராசிரியர் மஸாஹிர் நளீமி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பதவியேற்றதை கொண்டாடும் இனியநாள். பேராசிரியர் மஸாஹிர் அக்குறணை பாலிகா மற்றும் அக்குறணை அஸ்ஹர் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் என்ற வகையில் அவரின் இந்த உயர் பதவியேற்பானது அக்குறணை வாழ் மக்கள் அனைவருக்கும பெரும் மகிழ்ச்சியையும், உந்துதலையும் அளித்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

அந்த உந்துதலின் வெளிப்பாடே Education For Akurana என்ற Whatsapp குழுமத்தில் கலந்துரையாடப்பட்டு எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் ஊரின் நிர்வாகக் குழுக்கள் மற்றும் நலன் விரும்பிகள் தாமாக முன்வந்து இது போன்ற பாராட்டு விழா ஒன்றை நடாத்த முடிவு செய்தோம், அதன் பிரகாரம் அக்குறணை மக்களின் உளத்திருப்தியும், திருப்பொருத்தத்தையும் மற்றும் எதிர்கால எம் பிரதேச மாணவர்களின் நலன் கருதி இப்பாராட்டு விழா இன்று நடத்துவதில் நாங்கள் பெருமிதம் அடைகின்றோம்.



இலங்கை பல்கலைக்கழகமொன்றில் இஸ்லாமிய கற்கை நெறிக்காக முதல் பேராசிரியராக மஸாஹிர் அவர்கள் பதவியேற்றது இத்துறையில் கற்கும் மாணவர்களுக்கு மாத்திரமன்றி முழு சமுதாயத்திற்கும பெரும் வரப்பிரசாதமாகும்.

இவ்வாறான பாராட்டு நிகழ்வுகள் சமூகத்தின் பல மட்டங்களிலும நடாத்தப்பட வேண்டும், இதன் மூலம் கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் மேலோங்க வேண்டும் என்பதே எமது ஏற்பாட்டுக்குழுவின் பேரவாவாகும்.

பேராசிரியர் மஸாஹிரின் கல்வி ஞானமும், அறிவுத்திறனும் கொண்ட உயர்ந்த சேவை எம் சமூகத்திற்கும் முழு நாட்டிற்கும் இன்னும் சிறப்பாக கிடைக்கப்பெறல் வேண்டுமென்றும் இவருக்கு மென்மேலும் அறிவுவிருத்தியையும், ஆரோக்கியத்தையும் அருளவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**எப். எம். பாசில்**
தலைவர்
ஏற்பாட்டுக்குழு



முன்வரிசையில் அமர்ந்து இருப்பவர்கள் இடமிருந்து வலம் எம். ஏ. எச். எம். சவ்ராஜ், ரியாஸ் ஹனிபா, எஸ். ஏ. எம். பைரோஸ், எஸ். எம். எம். சாஜஹான், எம். ஐ. எம். இக்பால், சியாம் மின்ஹாஜி, எப். எம். பாசில், எம். ஜே. எம். பைசல், எம். ஆர். எம். நஸ்லான், எஸ். எம். ரழி, எம். ஐ. எம். மாஹிர், ஏ. ஜி. பசான் முஹமட் ஆகியோர்களுடன் பின் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம் எம். ஜே. எம். ஜரூக், ஏ. எம். எம். மஸீன், எஸ். எச். எம். நிஸ்வர், எம். ஆர். எம். பைரோஸ், எம். எச். மன்சீர் அஹ்மட், எச். எம். எம். ஹில்மி, எம். எம். எம். பெரோஸ், எம். ஏ.. எம். முயீன், எம். ஜே. ரினாஸ் முஹமட், என். எப். நவாஸ், எம். ஏ. எம். லுக்மான் ஆகிய ஏற்பாட்டுக் குழுவினரைப் படத்தில் காணலாம்.



புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற திருக்கார்த்திகை வழிபாட்டு நிகழ்வுகளின் போது பிடிக்கப்பட்ட படங்கள். ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வெங்கட சுந்தாராம குருக்கள் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன. (படம் : புத்தளம் தினகரன் நிருபர்)



பேருவளை கெச்சிமலை தர்காவுக்கு விஜயம் செய்த அப்லலுல் உலமா கலாநிதி அஹமத் நாஸிர் ஆலிம் விஷேட துஆ பிரார்த்தனையில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.
(படம் : பேருவளை நிருபர்)

## ரபீக் மாஸ்டருக்கு கலைஞர்களுக்கான விருது

**புத்தளம் தினகரன் நிருபர்**



வட மேல் மாகாண சாகித்திய விழாவில் மூன்று விருதுகளை வென்றெடுத்த புத்தளம் கலைஞர் ரபீக் மாஸ்டர், தொடர்ந்து புத்தளம் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட புத்தளம் பிரதேச கலைஞர்களுக்கான கலை, இலக்கியப் போட்டிகளிலும் மூன்று விருதுகளை அள்ளி குவித்துள்ளார்.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் (30) புத்தளம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.

புத்தளம் மாவட்ட செயலாளர் உட்பட பல்துறை தலைமைகள் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இப்போட்டிகளில் கலந்து கொண்ட ஓய்வு நிலை ஆசிரியர் கலாபூஷணம், எஸ்.எஸ்.எம். ரபீக் சிறுகதைப் போட்டியில் முதலிடத்தையும், பாடலாக்கப் போட்டியில் இரண்டாம் இடத்தையும், சிறுவர் கதைப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்று மீண்டும் சாதனை படைத்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள், பல்துறைக் கலைஞர்கள், பிரதேச காரியாலயத்தில் பணி புரியும் உத்தியோகத்தர்கள், அவர்களின் பிள்ளைகள் ஆகியோரும் போட்டிகளில் கலந்து வெற்றி பெற்றனர்.

வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும், புத்தகங்களும் பரிசாக வழங்கப்பட்டன.

இவ்விழாவில் விசேட அம்சமாக 60 வயதிற்கு மேற்பட்ட ரபீக் மாஸ்டர் உள்ளிட்ட கலைஞர்களுக்கு பெறுமதியான உலர் உணவுப் பொதியை பிரதேச செயலாளர் வழங்கி கௌரவித்தனர்.



புத்தளம் அனுராதபுர வீதியில் பாரிய மரம் வீழ்ந்து போக்குவரத்து ஸ்தமிதம் ஏற்பட்டது. இதனையடுத்து புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக், ஊழியர்களை வரவழைத்து குறித்த இடத்துக்குச் சென்று அவர்களுடன் இணைந்து பாரிய மரத்தை வெட்டி அகற்றினார். (படம் : புத்தளம் தினகரன் நிருபர்)

## ஒமிக்ரோன்... (04ஆம் பக்கத் தொடர்)

(04ஆம் பக்கத் தொடர்)

கர்நாடகாவில் ஒமெக்ரான் வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்ட இருவரின் முழு விபரம் தெரியவில்லை. இதில், 66 வயதானவர் வெளிநாட்டைச் சேர்ந்தவர். அவர் தென் ஆபிரிக்காவிலிருந்து வந்துள்ளார்.

மற்றொருவர், பெங்களூரில் டொக்டராக பணியாற்றுபவர் என தெரிய வந்துள்ளது. இவருடன் தொடர்பில் இருந்த ஐந்து டொக்டர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஒமிக்ரோன் வைரஸ் பாதிப்பு உள்ளதா என பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. அவர்களுடன் தொடர்பில் இருந்த மற்றவர்களை கண்டறியும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மஹாராஷ்டிராவில் கொரோனா பரவலை தடுக்க, வெளிநாட்டு பயணியருக்கான வழிகாட்டு நெறிமுறைகளை மாநில அரசு தனியாக வெளியிட்டிருந்தது. மத்திய உள்துறை அமைச்சகம், மஹாராஷ்டிர அரசுக்கு எழுதிய கடிதத்தில், மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றும்படி அறிவுறுத்தியது.

இதையடுத்து, வழிகாட்டு நெறிமுறைகளில் மாற்றம் செய்து மஹாராஷ்டிரா அரசு உத்தரவிட்டுள்ளது.

### சென்னையில் 275 படுக்கைகள் தயார்:

தமிழக சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்தில் ஒமிக்ரோன் வைரசை தடுக்க தேவையாக இருக்கும் முக்கிய மருந்துகள், ஒக்சிஜன் வசதிகள், முகக்கவசங்கள் போன்றவை மூன்று மாதங்களுக்கு தேவையான அளவு கையிருப்பில் உள்ளன. இந்த வைரஸ் பரவினால், அதை எதிர்கொள்ள பல்வேறு கட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, வைரஸ் பாதிப்புக்குள்ளாகும் நபர்களை தனிமைப்படுத்தி கண்காணிக்கும் வகையில், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தலா 150 படுக்கைகள் ஒதுக்க உத்தரவிடப்பட்டு உள்ளது.

தற்போது சென்னையில் ராஜிவ்காந்தி மருத்துவமனையில் 150, ஸ்டான்லியில் 75, ஓமந்தூரர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 50 படுக்கைகள் என 275 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளன. கிண்டி கொரோனா மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைகளில் கொரோனா படுக்கைகள் காலியாக இருப்பதால், தேவைப்படும் நேரங்களில் அவை ஒமிக்ரோன் தொற்றுக்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்தி கொள்ளப்படும். அதேபோல், அனைத்து மாவட்டங்களிலும் படுக்கைகள் ஒதுக்கீடு செய்யும் பணிகள் நடந்து வருகின்றன.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### 24 நாடுகளுக்கு பரவல்:

ஒமிக்ரோன் வகை கொரோனா வைரஸ் தென்னாபிரிக்காவில் கடந்த மாதம் 8ம் திகதி முதலில் கண்டறியப்பட்டது. கடந்த வாரம் இந்த வைரஸ் குறித்து உலக நாடுகளுக்கு எச்சரிக்கப்பட்டது.

இதுவரை இருந்த கொரோனா வைரஸ் வகைகளிலேயே இதுதான் மிகவும் ஆபத்தானதாக கருதப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் ஒவ்வொரு நாளும் பாதிப்பு, அதற்கு முந்தைய நாளை விட இரட்டிப்பாகி வருகிறது. இதற்கிடையே, இந்த வகை வைரஸ் 24 நாடுகளுக்கு பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.


## மக்கள் வங்கி – தெஹிவளை கிளை

**1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழ் விற்பனை**

## பெறுமதி வாய்ந்த ஆதனங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை

[illegible]

## கேள்விக்கான அழைப்பு

### இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு -10
### (சுகாதார அமைச்சு)

### வைத்தியசாலை உபகரணங்களை கொள்வனவு செய்தல்

01. 2021.12.21 மு.ப. 10.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக பொறிப்பிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படுகின்றன.

| உருப்படி இலக்கம் | உருப்படி | தொடர் இலக்கம் | உருப்படி அளவு | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | Difficult Airway Trolley | SA/07/2021 | 15 | [illegible] |
| 02 | Drug Trolley | SA/07/2021 | 30 | |
| 03 | Patient Transport Trolley | SGH/35/2021/01 | 10 | [illegible] |

02. இலங்கை சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்களால் பெயர் குறிப்பிடப்படும் அல்லது அதிகாரமுள்ள பிரதிநிதிகளுக்கு மாத்திரம் இக் கேள்வி அழைப்பிற்கு சமூகமளிப்பதற்கு தகைமையுண்டு.

03. கேள்வி ஆவணங்களை வாரத்தின் வேலை நாட்களில் 2021.12.04 முதல் 2021.12.21 வரை மு. ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் நாயகத்திற்கு [illegible] மீளளிக்கப்படாத கட்டணங்களை செலுத்தி பற்றுச் சீட்டும் பத்திரத்தை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
(தொலைபேசி இல. 011-2691111 நீடிப்பு - [illegible])

04. பொறிப்பிடப்பட்ட கேள்விகள் 2021.12.21 மு.ப. 10.00 இற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் இலங்கை தேசிய வைத்தியசாலையில் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும்.

05. மேலதிக தகவல்கள் தேவைப்படின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளரிடம் விசாரித்துப் பெற்றுக் கொள்ளலாம்.
(தொலைபேசி: இல. 011-[illegible])

தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு,
இலங்கை தேசிய வைத்தியசாலை,
கொழும்பு -10.

## விலைமனு அழைத்தல்

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## விலைமனு அழைத்தல் (IFB)

### 2022 ஆம் ஆண்டில் சுகாதார காப்புறுதி சேவையை வழங்கல்

ஒப்பந்த இலக்கம் : UGC/Admin/02/03/III

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சுகாதார காப்புறுதிச் சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையும் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து, முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பாக, பெறுகைக்குழுவின் தலைவர் இப்போது கோருகின்றார்.

02. இதற்கு தேவையான விபரக்குறிப்புக்கள் விலைமனுப்படிவங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

03. உத்தேசிக்கப்பட்டுள்ள சேவைகாலம் 365 நாட்களாகும்.

04. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறையின் பிரகாரம் விலைமனுக் கோரப்படும்.

05. இதற்காக தகுதியும் ஆர்வமுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிரதி செயலாளர்/பொது நிர்வாகம் இடம் தொலைபேசி இலக்கம் 0112685183 மூலம் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன் கொழும்பு - 07, வோட்பிளேஸ், இல.20, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பொது நிருவாகப்பிரிவில் விலைமனுப்படிவங்களை பரிசீலனை செய்துகொள்ளலாம்.

06. 2021.12.03 முதல் அலுவலக நேரங்களில் (மு.ப.9.00 - பி.ப.3.00) வார வேலை நாட்களில், எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத கட்டணத்தை இலங்கை ரூபாவில் மூவாயிரத்து ஐநூறு (ரூபா.3,500.00) செலுத்தி ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதற்காக ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டுள்ள முழுமையான விலைமனுப் படிவத்தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07. இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்றுள்ள, இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை ரூபாவில் நூறு ஆயிரம் மாத்திரம் (ரூபா 100,000.00) இற்கான மீளளிக்கப்படும் விலைமனுப்பிணையம் ஒன்றை அனைத்து விலைமனுதாரர்களும் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. இதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்கள், சுகாதாரக் காப்புறுதிச் சேவைகள் தொடர்பான அனைத்து விபரங்களையும் விலைமனுக்களுடனும் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில், "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என இரண்டு பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அவை தனித்தனி உறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரையிட்டு அவ் உறைகளின் மேல் "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" எனக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்விரு உறைகளும் ஒருறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், "2022 ஆம் ஆண்டில் சுகாதரக் காப்புறுதிச் சேவையை வழங்கல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

10. அனைத்து விலைமனுக்களும் 2021.12.17 அன்று பி.ப.3.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கொழும்பு -07, வோட் பிளேஸ், இல.20, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, திணைக்களப் பெறுகைக்குழுவின் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும். தாமதமாகும் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது நிராகரிக்கப்படும்.

11. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய குழு அறையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அனுமதிபெற்ற பிரதிநிதியொருவர் சமூகமளித்திருக்கலாம்.

12. விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் விநியோகித்தல் போன்றவற்றிற்கான எவ்வித செலவினங்களையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பொறுப்பேற்க மாட்டாது.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,
இல.20, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.
2021.12.03

# பிரதேச வைத்தியசாலைகளுக்கு ஒக்சிஜன் இயந்திரம் வழங்கிவைப்பு





மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலை, சந்திவெளி பிரதேச வைத்தியசாலைகளுக்கு ஒக்சிஜன் இயந்திரங்கள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பணிப்பாளர் வைத்தியர் மயூரன் மற்றும் உதவிப் பணிப்பாளர் அஞ்சுதன் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இராஜாங்க அமைச்சர் இதன் போது கருத்து தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்ட பிரதேச வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு விடுத்த வேண்டுகோளின் கீழ் பிரதேச வைத்தியசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வது தொடர்பில் விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக பிரதேச வைத்தியசாலைகளுக்கு ஒக்சிஜன் இயந்திரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் முதற்கட்டமாக மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலை மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சந்திவெளி பிரதேச வைத்தியசாலைகளுக்கு ஒக்சிஜன் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட பிரதேச வைத்தியசாலையில் காணப்படுகின்ற குறைபாடுகள் படிப்படியாக இவ்வாறு நிவர்த்தி செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

## பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைப்பு

புத்தளம் மாவட்டத்தில் கொவிட் 19 நீண்ட கால விடுமுறையில் பாதிக்கப்பட்டு வருவாய் இழந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

புத்தளம் மாவட்ட சர்வமத குழுவும், புத்தளம் ஒடெப்ட் நிறுவனமும் இணைந்து இந்த பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தன. தேசிய சமாதான பேரவை இதற்கு அனுசரனை வழங்கிவிருந்தது.

புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு, வண்ணாத்திவில்லு பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு இந்த பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அந்தந்த பிரதேசங்களில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் தெரிவு செய்யப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மாணவர்களுக்கு இந்த பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. சர்வமத தலைவர்களும் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

## புத்தளத்தில் எரிவாயு கசிவு வெடிப்புச் சம்பவம்

புத்தளம் வெஸ்டன் சோல்டன் வீதி ஐந்தாம் ஒழுங்கையில் அமைந்துள்ள வீடு ஒன்றில் எரிவாயு கசிவு காரணமாக சமையல் அடுப்பு வெடித்துள்ளது.

இச்சம்பவம் புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதன்போது எவருக்கும் காய மேற்படவில்லையென வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

புத்தளம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து இது தொடர்பாக ஆராய்ந்தனர்.

இந்த வெடிப்பு சம்பவமானது புத்தளம் நகரில் எரிவாயு கசிவினால் இடம்பெற்ற முதலாவது வெடிப்புச் சம்பவமென பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் புத்தளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு

(மாவத்தகம தினகரன் நிருபர்)

அக்குறணை கல்வி மேம்பாட்டுக்கான ஐக்கிய அமைப்பினரின் ஏற்பாட்டில் தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி எஸ். எம். எம். மஸாஹிர் நளிமிக்கு பேராசிரியர் பட்டம் வழங்கப்பட்டதைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நாளை 05.12.2021 ஞாயிற்றுக்கிழமை மு. ப 9.00 மணிக்கு இடம் பெறும். அஸ்ஹர் தேசிய பாடசாலையின் அதிபர் ஏ. எல்.அன்வர் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெறும்.

ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் எப். எம். பாஸில் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் எம். எம். எம் நாஜிம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். விசேட பேச்சாளராக தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மொழித்துறைப் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் வாழ்த்துரையினை முன்னாள் அக்குறணை முஸ்லிம் பாலிகா கல்லூரி அதிபர் ரிஹானா செய்ன், முன்னாள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஆணையாளர் எஸ். ஏச். எம். சபீக், பேருவளை ஜாமியா நளிமியா கலாபீடத்தின் பகுதிநேர விரிவுரையாளர் உஸ்தாத் எம். ஏ. எம். மன்சூர், அக்குறணை பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி எம். எப். எம். அஸ்மி, அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி எம். ஏ. எம். சியாம் (யூசுபி) ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நிகழ்ச்சித் தொகுப்பினை பெரோஸ் மஹ்ரூப் அவர்களும் ஏற்புரையினை தென்கிழக்குப் பல்கலைக்கழக அரபு மற்றும் இஸ்லாமிய கற்கை பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ். எம். எம். மஸாஹிர் அவர்களும் ஏற்பாட்டுக் குழுவின் செயலாளர் எம். ஜே. எம். பைசல் நன்றியுரையினையும் நிகழ்த்துவர். இதில் விசேட அம்சமாக வரவேற்பு கீதம், வாழ்க்கை வரலாறு தொடர்பான காணொளி காட்சிப்படுத்தல், மலர் வெளியிடுதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பவள விழாக் காணும் பாணகமுவ அந்நூர் மத்திய கல்லூரி

(மாவத்தகம தினகரன் நிருபர்)

பாணகமுவ அந்நூர் தேசிய பாடசாலையின் 75 ஆவது வருட பவள விழா வைபவம் நேற்று வெள்ளிக்கிழமை பி. ப 2.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் ஏ. எஸ். எம். இர்ஷாட் தலைமையில் இடம்பெற்றது. 75 ஆவது ஆண்டு பவள விழா தினத்தை முன்னிட்டு விசேடமாக ஞாபகார்த்த நினைவு தூபியினை திரை நீக்கம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக இப்பாகமுவ கல்வி வலயப் பணிப்பாளர் ஸ்ரீமவன் பொடி நிலமே கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். விசேட அதிதிகளாக பாணகமுவ கோட்டக் கல்விப் பணிப்பாளர் திலகரட்ன, பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். இதில் விசேட அம்சமாக இக் கல்லூரியில் 1946 , 1947 களில் கல்வி கற்ற 10 ஆரம்ப கால மாணவர்கள் கௌரவ அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


### பதுளை மாநகர சபை

### 2022ஆம் வருடத்தில் பதுளை மாநகர சபையின் ஆதனங்களை குத்தகைக்கு விடுவதற்காக தேசிய போட்டி ரீதியில் கேள்வி கோரல்

பதுளை மாநகர சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை குத்தகைக்கு விடுவதற்காக பின்வரும் வகையில் தேசிய போட்டி ரீதியில் கேள்விகள் கோரப்படுகின்றன.

| | ஆதனங்களின் பெயர் | ஆகக் குறைந்த கேள்வி வரிகள் இன்றி (ரூபா சதம்) | கேள்வி வைப்புத் தொகை: மீளளிக்கப் படும் வைப்பு ரூபா | கேள்வி வைப்புத் தொகை: மீளளிக்கப் படாத மற்றும் படிவக் கட்டணம் ரூபா | குத்தகைக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பஸ் நிலைய இடப்பரப்பிலுள்ள பொது மலசலகூடம் | 7,125,000.00 | 142,500.00 | 1500.00 | 2022-01-01ஆம் திகதி முதல் 2022-12-31ஆம் திகதி வரை |
| 2 | தெற்கு ஒழுங்கை பொது மலசலகூடம் | 2,365,500.00 | 47,500.00 | 1500.00 | |
| 3 | பதுளை பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள குறுக்கு சுரங்கப் பாதையின் உள்ளக 05 கடை அறைகளை குத்தகைக்கு விடுதல் கடை அறை இலக்கம்: 01, 02, 03, 09, 10 | ஒரு கடை அறைக்கு ஒரு தடவை மட்டும் செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை 1,900,000.00 ரூபா மாதாந்த வாடகை 8000.00 | இலங்கைப் பண அலகில் 50,000.00 ரூபா அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் 120 நாட்களுக்காக பெற்றுக்கொண்ட 100,000.00 ரூபா வங்கிப் பிணையை வைப்புச் செய்தல் வேண்டும் | 5000.00 | 25 வருடங்களுக்கு |
| 04 | பஸ் நிலைய இடப் பரப்பிலுள்ள 22ஆம் இலக்க கடை அறை | ஒரு தடவை மட்டும் செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை 600,000.00 ரூபா மாதாந்த வாடகை 2500.00 | 12,000.00 | 1500.00 | |

கேள்வி ஆவணங்களை வழங்குதல் : 2021-12-03ஆம் திகதி முதல் 2021-12-23ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பதுளை மாநகர சபை அலுவலகத்தில்

கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் : 2021-12-24ஆம் திகதி மு.ப. 9.45 மணிக்கு

கேள்விகளைத் திறத்தல் : 2021-12-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பதுளை மாநகர சபை அலுவலகத்தில்

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மாநகர ஆணையாளர் / மாநகர கணக்காளரிடம் விசாரித்தறிந்து கொள்ளலாம். (தொலைபேசி இல. 055-2224277/0554934521/0554934500)

கேள்விகளைத் திறக்கும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**கவனிக்க வேண்டியது:**

01. விண்ணப்பதாரர் 18 வயதுக்கு மேற்பட்டவராகவிருத்தல் வேண்டும்.

02. பதுளை மாநகர சபை ஆதனங்கள் தொடர்பில் எந்தவொரு கௌரவ நீதிமன்றத்தினாலும் எவ்விதத்திலும் சட்டபூர்வமான நடவடிக்கைளின்போது குற்றவாளியாகக் காணப்பட்டவர்கள் மற்றும் சபை ஆதனங்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் உள்ள சட்ட நடவடிக்கைகளில் தரப்பினராக உள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.

03. மாநகர சபைக்கு வாடகை நிலுவை செலுத்தவுள்ள மற்றும் இதற்கு முன் பெறுகை சட்ட திட்டங்களை மீறியுள்ள எவருக்கும் மற்றும் நிறுவனத்திற்கு இதற்காக விண்ணப்பிக்க முடியாது. எவ்வாறாயினும் அவ்வாறான பெறுகைக் கேள்விகளைச் சமர்ப்பித்துள்ளதாக மாநகர சபை உறுதி செய்யும் சந்தர்ப்பத்தில் கேள்வி இரத்துச் செய்யப்பட்டு வைப்புச் செய்யப்பட்டுள்ள பிணைத் தொகை சபைக்குரித்தாக்கப்படுவதற்கும், கேள்வியை இரத்துச் செய்து குறித்த சபை ஆதனத்தை சுவீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவ்வாறான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

04. சமர்ப்பிக்கப்படும் பெறுகைக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் மற்றும் நிராகரிக்கும் முழுமையான அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னத்தே கொண்டுள்ளது.

05. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஆகக் குறைந்த கேள்வியை விட குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதுடன், கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் கேள்வி வைப்புத் தொகை சபைக்குரித்தாக்கப்படும்.

06. பெறுகைச் செயற்பாடுகள் பிரகாரம் கேள்விதாரரினால் 02 கேள்விப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அக்கேள்விப் படிவங்களை வெவ்வேறு உறைகளில் உள்ளிட்டு அவ்வுறைகளில் 1 மூலப் பிரதி மற்றும் 2 நகல் பிரதியெனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் தலைவர், பெறுகைக் குழு, மாநகர சபை, பதுளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
பதுளை.

2021-12-02



### பெறுகை அறிவித்தல்

### கட்டிட பழுதுபார்த்தல்களை நிறைவேற்றுதல்

### கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட நிறுவனமான ராகம புனர்வாழ்வு வைத்தியசாலையில் கீழே குறிப்பிடப்படும் கட்டிட பழுதுபார்த்தல்களுக்காக கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழு தலைவரால் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | கேள்வி கோரல் இல. | நிறுவனம் | உருப்படி | CIDA பதிவுத் தகைமை |
|---|---|---|---|---|
| 01 | AC/T/12/2021 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | நரம்பியில் சிகிச்சையகத்தின் மின் அமைப்புக்களை தயாரித்தல் மற்றும் பழுது பார்த்தல்களை மேற்கொள்ளல் | C9 அல்லது அதற்கு மேல் தரம் மற்றும் EM5 அல்லது மேல் தரம் |
| 02 | AC/T/15/2021 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | வாா்ட் இல 23 இல் தாதியர் ஓய்வு அறையில் இடப்பட்டுள்ள Partition ஒழுங்குபடுத்தல் | C9 அல்லது மேற்பட்ட தரம் |
| 03 | AC/T/20/2021 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | ENT வைத்திய நிபுணர் அலுவலக அறையை ஒழுங்குபடுத்தல் | C9 அல்லது மேற்பட்ட தரம் |
| 04 | AC/T/21/2021 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | CSSD பிரிவு Washing Machines மற்றும் Dryer Machine பொருத்துவதற்காக தயார்படுத்தல் | C9 அல்லது மேற்பட்ட தரம் மற்றும் EM5 அல்லது மேல் தரம் |
| 05 | AC/T/22/2021 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | Fibroscoan Room இன் இரும்புக்கு, மதிலை நிர்மாணித்தல் | C9 அல்லது மேற்பட்ட தரம் |
| 06 | AC/T/23/2021 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | மருத்துவ தீவிர சிகிச்சை பிரிவு Partition செய்தல் | C9 அல்லது மேற்பட்ட தரம் |
| 07 | AC/ RRH/T/03/2021 | புனர்வாழ்வு வைத்தியசாலை - ராகம | மருந்துக் களஞ்சியத்தில் பழுது பார்த்தல்களை மேற் கொள்ளுதல் | C8 அல்லது மேற்பட்ட தரம் |

தேசிய போட்டி கேள்விகோரல் மூலம் இவ் ஒப்பந்தகாரர்கள் நியமிக்கப்படுவர்

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள எந்தக் கேள்விதாரர் பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிடும் ஒருவருக்கு கீழ்காணும் விடயங்களை சமர்ப்பித்து 2021.12.04 முதல் 2021.12.24 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.30 முதல் பி.ப.2.30 வரை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் நிதிப்பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தல்
- கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் காசாளருக்கு மீளளிக்கப்படாத ரூ.2500.00 கட்டணத்தை செலுத்துதல்.
- வியாபார பதிவுச் சான்றிதழின் பதிவு செய்த பிரதியொன்றை சமர்ப்பித்தல்

04. ரூபா 05 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விக்காக 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 2021.12.24 பி.ப.2.30 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பொறிப்பிடப்பட்ட கேள்விகளை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமூகமளிக்கலாம்.

06. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன், "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என குறிப்பிடப்படல் வேண்டும். கேள்வி உள்ளிடும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த பழுதுபார்த்தலின் பெயர் மற்றும் திறக்கப்படும் தினத்தை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(தொலைபேசி இல - 0112959261/2 நீடிப்பு - 139
பெக்ஸ் - 011-2959714
தலைவர்
பிரதேச பெறுகைக்குழு
கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை
ராகம.

**Repeat Your Ad For Better Offers**

## பெயர் மாற்றம்

[illegible]

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொட்டாவ, குலசெவன வீதி 693/2E இல் வசிக்கும் (தே.அ.அ.இல. 810460431V) அருண வெத்தசிங்ஹ ஆகிய நான் மேற்படி முகவரியில் வசிக்கும் சசிலா மல்லிகா ஜயமஞ் (தே.அ.அ.இல. 505210026V) என்பவருக்கு வழங்கப்பட்டதும் சந்தி நதீனானி போதெறுவத்த என்பவரினால் 2011.01.09 அன்று இலக்கம் 136இன் கீழ் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணி தத்துவமானது 2021.12.01ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டுள்ளதென அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொட்டாவ, குலசெவன வீதி 693/2E இல் வசிக்கும் (தே.அ.அ.இல. 915623310V) சச்சினி விதுசினா நீல் ஆகிய நான் மேற்படி முகவரியில் வசிக்கும் சசிலா மல்லிகா ஜயமஞ் (தே.அ.அ.இல. 505210026V) என்பவருக்கு வழங்கப்பட்டதும் சந்தி நதீனானி போதெறுவத்த என்பவரினால் 2014.02.25 அன்று இலக்கம் 406 என்ற அற்றோணி தத்துவத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அற்றோணி அதிகாரமானது 2021.12.01 முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**Best way to fulfil your Future Dreams**

*Marriage Proposals*

in the

**Sunday Observer**

### திவுலப்பிட்டிய பிரதேச சபை

# 2022ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

திவுலப்பிட்டிய பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இறைச்சிக்கடை, மீன் கடைகளின் விற்பனை உரிமையை 2022.01.01ஆம் திகதி முதல் 2022.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் என்னால் ஏற்கப்படும்.

2. கேள்விப் படிவங்கள் வழங்கப்படுதல் - 2021.12.08ஆம் திகதி வரை (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை)

   கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2021.12.15 மு.ப. 9.30 மணி வரை

   கேள்விகள் திறக்கப்படுதல் - 2021.12.15 மு.ப. 9.30 மணிக்கு.

3. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத்தொகை என்பவற்றை திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்குச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறைந்தபட்ச கட்டணத்திற்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். அவ்வாறான கேள்விதாரர்களின் வைப்புத் தொகை மற்றும் கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களின் வைப்புத் தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.

5. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்கள் 2021.12.14ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை என்னால் ஏற்கப்படும். குறித்த விண்ணப்பப்படிவக் கட்டணம் மற்றும் கேள்விப் பிணை வைப்புத் தொகையை திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு செலுத்தி 2021.12.14ஆம் திகதி பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

6. கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரர் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் இதற்கு முன் பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் வர்த்தக உரிமையை குத்தகைக்கு பெற்று உடன்படிக்கைகளை மீறியுள்ள குத்தகைதாரர்களுக்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

7. கேள்வி விண்ணப்பங்களை வெவ்வேறாக பூர்த்தி செய்த பின்னர் "மூலப்பிரதி" மற்றும் "நகல் பிரதி"யை வேறுவேறாக இரு உறைகளில் இட்டு அவ் உறைகளின் பின்பக்கம் "மூலப்பிரதி" மற்றும் "நகல் பிரதி" என்று குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் இன்னுமொரு கடித உறையில் இட்டு முத்திரைக் குறியிட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை "தலைவர், திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டிய" எனும் முகவரிக்கு 2021.12.15ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு முன் திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

8. 2021.12.15ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் அந்நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

9. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபையின் தீர்மானம் என்பதுடன் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

10. உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை முழுமையாகச் செலுத்தி முடித்தல் வேண்டும்.

11. மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் வினாவித்தறியலாம்.

உ.த. இந்திக்க ஜயசிங்க
தலைவர்,
திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டியவில்.
2021.12.05

தொலைபேசி இல. : 031-2246275
தொலைநகல் இல : 031-2243865

| தொடர் இலக்கம் | ஆதனத்தின் தன்மை | 2022ஆம் ஆண்டிற்கான ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா) | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப் படும்) (ரூபா) | படிவக் கட்டணம் (மீளளிக் கப்படாத) (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | திவுலப்பிட்டிய இறைச்சிக் கடை | 411,909.30 | 41,190.93 | 500.00 |
| 2 | கொட்டதெனியாவ மீன் தட்டு இல. 01 | 189,000.00 | 18,900.00 | 500.00 |
| 3 | படல்கம மீன் கடை இல. 03 | 19,350.00 | 1,935.00 | 500.00 |
| 4 | கல்வத்த வாரச்சந்தை இடப்பரப்பிலுள்ள இறைச்சிக்கடை | 50,000.00 | 5,000.00 | 500.00 |

# விலைமனு அழைத்தல்

### சுகாதார அமைச்சு
### மாகாண பொது வைத்தியசாலை - பதுளை

பதுளை மாகாணப் பொது வைத்தியசாலையின் பின்வரும் கைத்தொழில்களிற்காகத் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, பிராந்திய பெறுகைக் குழுத்தலைவரினால் விலைமனுக்கோரப்படுகின்றது. 2021.12.24 அன்று பி.ப.2.30 இற்கு விலைமனுத் திறக்கப்படுமென்பதுடன், அன்றைய தினம் பி.ப.2.30 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு விலைமனுக்கள் அனுப்பப்படல் வேண்டுமெனவும் அறிவிக்கப்படுகின்றது. அனைத்து விலைமனுக்களும் "தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாகாணப் பொது வைத்தியசாலை, பதுளை" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்படலாமென்பதுடன், நேரடியாக ஒப்படைப்பதானால், அலுவலகத்தில் முத்திரையிட்டு வைக்கப்பட்டுள்ள கணக்காளரின் பெறுகைப் பெட்டியில் உரிய நேரத்தின் முன்னர் சேர்த்தல் முடியும். விலைமனுக்களை அடக்கும் தபாலுறைகளின் இடதுபக்க மேல் மூலையில் விலைமனு திறக்கப்படும் திகதி மற்றும் உரித்தான கைத்தொழிலின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | கைத்தொழில் | விலைமனுப் பிணையம் |
|---|---|---|
| 01 | A சத்திர சிகிச்சைக்கூடம் மற்றும் B சத்திர சிகிச்சைக் கூடங்களிற்காக LEAD DOOR 09ஐ வழங்கி நிறுவுதல் | 80,000.00 |
| 02 | களஞ்சிய வசதிகளிற்காக நீளம் 40 அடி உயரம் 9.5 அடி மற்றும் அகலம் 8 அடி கொண்ட கொள்கலன் பெட்டிகள் (Container Box) 04 ஐ வழங்கி அமைவிட மொன்றில் நிறுவுதல் | 70,000.00 |

01. விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 2,500.00 இற்கான மீளளிக்கப்படாத கட்டணமொன்றை பதுளை மாகாணப் பொது வைத்தியசாலையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடன் வியாபாரப் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

    2021.12.06 முதல் 2021.12.23 வரை வார வேலை நாட்களில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00 வரை பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பதுளை மாகாண பொது வைத்தியசாலையின் நிருவாகப் பிரிவில் இதற்கான விலைமனு மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக, பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதாயின் விண்ணப்பதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட கடிதமொன்று மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

02. விலைமனுப்படிவங்களை பெற்றுக்கொள்ள முன்னர், பதுளை மாகாணப் பொது வைத்தியசாலை நிருவாகப் பிரிவில், விலைமனு மாதிரிப்படிவங்களை இலவசமாக பரிசீலனை செய்து கொள்ளலாமென்பதுடன், களப்பரிசீலனையின் பின்னர் இதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைமனு திறக்கப்படும் தினத்திலிருந்து 119 நாட்களிற்குச் செல்லுபடியாகும், விலைமனுப் பிணையமொன்று விலைமனு மூலப்பிரதியுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

04. விலைமனு மாதிரிப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகளிற்கமைவாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. தொடர் இலக்கம் 01 மற்றும் 02 இற்கான கைத்தொழில்களிற்கான முன்னோடிக் கலந்துரையாடலொன்றிற்காக, (Pre Bid Meeting) விலைமனுக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், முன்வரும் தினமொன்றில் விலைமனுதாரர்களிற்கு அறிவிக்கப்படும். அத்துடன் விலைமனுதாரர்கள் களப்பரிசீலனை மேற்கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் அக் கலந்துரையாடலிற்கு சமுகமளிப்பது கட்டாயமாகும்.

06. 2021.12.24 அன்று பி.ப.2.30 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாக அவை, பதுளை மாகாணப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். அவ்வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதாயின் விண்ணப்பதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட கடிதமொன்று மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

07. 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களிற்காக பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA-03 சான்றிதழ் கட்டாயமாகும்.

08. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) முறைமையின் பிரகாரம் இவ்விலைமனுக்கோரப்படும்.

09. பதுளை மாகாணப் பொது வைத்தியசாலையின் , பிராந்தியப் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக அமையும் என்பதனை விலைமனுதாரர் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

தலைவர், பிராந்திய பெறுகைக்குழு
மாகாண பொது வைத்தியசாலை - பதுளை
2021.12.02 ஆம் திகதி

தொலைபேசி இல : 055-2222261
தொலைநகல் இல : 055-2231205
மின்னஞ்சல் : info@badullapgh.org
வலைத்தளம் : www.badullapgh.org

# PEOPLE'S MERCHANT FINANCE PLC

[illegible]

[illegible]

# மேற்கிந்திய தீவுகள் அணியை வைட் வோஷ் செய்தது இலங்கை

## விடைபெற்றார் தலைமை பயிற்சியாளர் மிக்கி ஆர்தர்

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், இலங்கை கிரிக்கெட் அணி 164 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2–0 என்ற கணக்கில், இலங்கை அணி முழுமையாக கைப்பற்றியுள்ளது.

காலி மைதானத்தில் கடந்த 29ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 204 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.



இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பெத்தும் நிஸங்க 73 ஓட்டங்களையும் திமுத் கருணாரத்ன 42 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், வீராசாமி பெர்மால் 5 விக்கெட்டுகளையும் வோரிக்கான் 4 விக்கெட்டுகளையும் ரோஸ்டன் சேஸ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 253 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கிரைஜ் பிரத்வெயிட் 72 ஓட்டங்களையும் பிளக்வுட் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ரமேஸ் மெண்டிஸ் 6 விக்கெட்டுகளையும் எம்புல் தெனிய மற்றும் ஜெய விக்கிரம ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 49 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 345 ஓட்டங்களை பெற்றிருந்தபோது தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடை நிறுத்திக்கொண்டது.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு, இலங்கை அணி 297 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காது 155 ஓட்டங்களையும் பெத்தும் நிஸங்க 66 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், வீராசாமி பெர்மால் 3 விக்கெட்டுகளையும் ரொஸ்டன் சேஸ் 2 விக்கெட்டுகளையும் ஹோல்டர் மற்றும் பிரத்வெயிட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



இதனைத்தொடர்ந்து ஒருநாள் மீதமிருக்க 297 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 132 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கிரைஜ் பிரத்வெயிட் 72 ஓட்டங்களையும் பிளக்வுட் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், லசித் எம்புல்தெனிய மற்றும் ரமேஸ் மெண்டிஸ் ஆகியோர் தலா 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தனஞ்சய டி சில்வாவும் தொடரின் நாயகனாக பெத்தும் நிஸங்கவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

குறிப்பாக இந்த தொடருடன் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் பயிற்றுவிப்பாளர் பணியில் இருந்து விடைபெறுகிறார்.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2021

43rd

Recognizing talent, inspiring greatness.

SLTMOBITEL The Connection

43வது ஒப்சவர் SLT-மொபிடெல்

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2021

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2021

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2021

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ...........

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ...........

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

Sunday Observer

பாடசாலை : ...........

வாக்களித்தவர் பெயர் : ...........

முகவரி : ...........

மொபைல் இல. : ...........

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500

3வது பரிசு : ரூ. 1,000

43வது ஒப்சவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT-மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 04-12-2021 இல. 09






இலங்கை உடற்கட்டழகு மற்றும் உடற்தகுதி கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த சிறந்த ஆணழகன் போட்டி அண்மையில் கொழும்பு ஹைட்பார்க் விளையாட்டரங்கில் நடைபெற்றபோது போட்டியாளர்கள் ஆற்றுகை நிகழ்த்துவதையும் நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட உதவிமேயர் எம்.ரி.எம். இக்பால் வெற்றி பெற்ற வீரருக்கு பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## அம்பாறை மாவட்டத்திற்கு பெருமைசேர்த்த சம்மாந்துறை ரோயல் மெட்ரிட் அணி



*சவளக்கடை குறூப் நிருபர்*

இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 33ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் வலைபந்து போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சம்மாந்துறை ரோயல் மெட்ரிட் அணி கலந்து கொண்டது.

கிளிநொச்சி உள்ளக அரங்கில் இடம்பெற்ற வலைபந்து போட்டியின் முதல் போட்டியில் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய சம்மாந்துறை ரோயல் மெட்ரிட் அணி முல்லைதீவு அணியை வீழ்த்தி அடுத்த சுற்றான 'சுப்பர் 8' சுற்றுக்கு தெரிவானது.

'சுப்பர் 8' சுற்றில் முழு மூச்சாக போட்டியிட்ட அம்பாறை மாவட்ட அணி 5–6 என்ற செட் கணக்கில் குருநாகல் மாவட்ட அணியிடம் தோல்வி கண்டு அரையிறுதி வாய்ப்பை பரிதாபமாக இழந்தது. சம்மாந்துறை ரோயல் மெட்ரிட் அணியானது அகில இலங்கை ரீதியில் வலை பந்து போட்டியில் அம்பாறை மாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்தி களமிறங்குவது இது மூன்றாவது தடவையாகும்.

இதில் 'சுப்பர் 8' சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாகவும் அமைந்திருந்தது. குறுகிய காலத்தில் பயிற்சிகளை மேற்கொண்டு சிறந்த பெறுபேற்றை அடைந்த சம்மாந்துறை ரோயல் மெட்ரிட் கழகத்துக்கு ஏராளமான வாழ்த்துகள் குவித்துவரும் நிலையில், எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று அம்பாறை மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கவும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

## மூதூர் அல்-ஹிலால் மாணவன் நிப்ராஸ் தேசிய இராணுவ தடகளப் போட்டியில் 02 தங்கம் 01 வெள்ளி பெற்று சாதனை

*மூதூர் தினகரன் நிருபர்*

மூதூர் அல்ஹிலால் மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், கொழும்பு பல்கலைக்கழ மாணவருமான ஆர்.எம்.நிப்ராஸ் 2020/2021 ஆண்டுக்கான 57 ஆவது தேசிய இராணுவ தடகளப் போட்டியில் பங்கு கொண்டு 02 தங்கம் உள்ளடங்களாக 01 வெள்ளிப் பதக்கமுமாக 03 பதக்கங்களை பெற்று சாதனை ஈட்டி உள்ளார்.



மேலும் இப்போட்டியானது 22.11.2021 தொடக்கம் 26.11.2021 வரை கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது. தேசிய இராணுவ தடகளப் போட்டியில் பங்கு பற்றிய இவர் 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1 ஆம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் 4 x 1500 மீற்றர் ஓட்டத்தில் 1ஆம் இடம் பெற்று தங்கத்தினையும், 4 ஒ 800 மீற்றர் ஓட்டத்தில் 2ம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்துள்ளார்.

மூதூர் அல்ஹிலால் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான நிப்ராஸ் பாடசாலை, வலய, மாகாண, தேசிய மட்டத்திலான போட்டிகளிலும் பல பதக்கங்களை பெற்றுக் கொண்டவர் ஆவார்.

இவரின் உயர் படிப்புடன் கூடிய விளையாட்டுத் திறனை மூதூர் அல்ஹிலால் மத்திய கல்லூரி அதிபர் கே.றஸீம், பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் மற்றும் மூதூர் பிரதேச மக்கள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 4ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.